பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

புதன்பொய்கை

சுடர் : 40
கதிர் : 231

புதன்கிழமை
16 ஜூலை 2025

ஆனி 32 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

## பணிப்புறக்கணிப்பு!

கொழும்பு, ஜூலை 16
தபால் தொழிற்சங்க முன்னணியினர் நேற்று நள்ளிரவு முதல் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர்.
நாடு முழுவதும் உள்ள தபால் நிலையங்கள் மற்றும் நிர்வாக 15

## ஜூலை 21இல் அகழ்வு; ஓகஸ்ட் 6இல் வழக்கு!

யாழ்ப்பாணம், ஜூலை 16
செம்மணி மனிதப் புதைகுழி மீதான மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகள், எதிர்வரும் 21ஆம் திகதி இடம்பெறும் என்று யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் 15

செம்மணியில்

# மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றிருக்க வாய்ப்பு!

புதைகுழி அகழ்வு தொடர்பில்

பேராசிரியர் சோமதேவா அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 16
அரியாலை - சித்துப்பாத்தி (செம்மணி) மயானத்தில் அடையாளம் காணப்பட்டுள்ள மனிதப் புதைகுழியில், மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றிருக்கச் சாத்தியங்கள் அதிகமுள்ளன - இவ்வாறு பேராசிரியர் ராஜ்சோம தேவ அறிக்கையிட்டுள்ளார். 15

புதைகுழியில் மீட்கப்பட்டது

## சிறார்களின் காலணியே!

யாழ்ப்பாணம், ஜூலை 16
செம்மணிப் புதைகுழியில் இருந்து காலணியொன்று மீட்கப்பட்டிருந்த நிலையில், அது 6ஆம் இலக்க 15



## மீட்கப்பட்ட சான்றுகள் பெண்களுடையவையே

யாழ்ப்பாணம், ஜூலை 16
செம்மணி மனிதப் புதைகுழியில், நீலநிறப் பையுடன் அகழ்ந்து எடுக்கப்பட்ட மனித என்புத்தொகுதியுடன் 15

## தடயப் பொருள்களிடையே நெருக்கமான தொடர்புகள்!

யாழ்ப்பாணம், ஜூலை 16
செம்மணிப் புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட சில தடயப் பொருள்களுக்கு இடையில் நெருக்கமான தொடர் 15

## கட்டப்பட்ட பொதிக்குள் மனித என்புச்சிதிலங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 16
செம்மணி சித்துப்பாத்தி மயானத்தில், அகழ்வுப் பணிகள் இடம்பெற்றுவரும் இரண்டாவது புதைகுழிக்குள் 15

புத்தகப்பையுடன் மீட்கப்பட்டது

## பெண்பிள்ளையின் என்புத்தொகுதியே

என்பு பருவவியல் ஆய்வில் தகவல்

யாழ்ப்பாணம், ஜூலை 16
செம்மணிப் புதைகுழியில் இருந்து நீலநிறப் பையுடன் மீட்கப்பட்ட என்புத்தொகுதி (எஸ்-25) பெண் பிள்ளையுடையது என்றும், அந்தப் பிள்ளை 4 அல்லது 5 வயதுடையதாக இருந்திருக்கலாம் என்றும் நீதிமன்றில் கூறப்பட்டுள்ளது.
செம்மணி மனிதப் புதைகுழியில், 15



'இந்த எலும்புகளுக்குள்ள இன்னும் என்னென்ன உண்மையள் ஒளிச்சிருக்கோ தெரியேலை கண்டியளோ'

வலி.வடக்கில் உள்ள

## காணிகளை விடுவிக்கக்கோரி கொழும்பில் நேற்றுப் போர்!

கொழும்பு, ஜூலை 16
யாழ்ப்பாணம் வலிகாமம் வடக்குப் பகுதியில், படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி, கொழும்பில் உள்ள ஜனாதிபதி 15

ஈஸ்டர் தாக்குதல்

## விசாரணைகளில் புதிய தகவல்கள்

கொழும்பு, ஜூலை 16
உயிர்த்தஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் இதுவரை வெளியாகாத பல தகவல்கள் அண்மைக்கால விசார 15

வடக்குமாகாண

## உயர்மட்ட அதிகாரிகளுக்கு நாளைமுதல் இடமாற்றங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 16
வடக்கு மாகாண உயர்மட்ட அதிகாரிகள் பலருக்கு இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த இடமாற்றங்கள் நாளை வியாழக்கிழமை முதல் நடைமுறைக்கு வரும் என்று 15

கூமாங்குள பதற்றம்

## மாரடைப்பு காரணமாகவே உயிரிழப்பு சம்பவித்தது!

விரிவு பக்கம்:- 15

கொமர்ஷல் வங்கி சிலோன் பீஎல்சி யின் சக்தியுடன்
உங்களின் வெற்றிக்காக
உங்கள் பின்னணியில்
CBC FINANCE



உங்களுக்கும் உங்கள் சிறிய மற்றும் நடுத்தர வணிகங்களுக்கும் லீசிங், கடன் உள்ளிட்ட பல்வேறுபட்ட நிதியியல் சேவைகளுடன் கை கொடுக்கும்.
CBC பினான்ஸ் - உங்கள் வெற்றியின் பின்னணியில்
0768 700 700
FitchRating
www.cbcfinance.lk
CBC FINANCE

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத** — திகதி: 15.07.2025; சீட்டிழுப்பு இலக்கம்: 4133; ஆங்கில எழுத்து: M; வெற்றி இலக்கங்கள்: 07 15 61 65; விசேட எழுத்து: M

**ஹந்தஹன ராசி சுப பலன்** — திகதி: 15.07.2025; சீட்டிழுப்பு இலக்கம்: 1200; வெற்றி இலக்கினம்: மேஷம்; வெற்றி இலக்கங்கள்: 23 33 55 62

**NLB ஜய** — திகதி: 15.07.2025; சீட்டிழுப்பு இலக்கம்: 0159; ஆங்கில எழுத்து: X; வெற்றி இலக்கங்கள்: 7 5 9 0

**மெகா பவர்** — திகதி: 15.07.2025; சீட்டிழுப்பு இலக்கம்: 2239; ஆங்கில எழுத்து: M; சுப்பர் இலக்கம்: 19; வெற்றி இலக்கங்கள்: 14 15 44 73

**மஹஜன சம்பத** — திகதி: 15 .07.2025; சீட்டிழுப்பு இலக்கம்: 5891; ஆங்கில எழுத்து: U; வெற்றி இலக்கங்கள்: 4 6 9 9 8 8

**தன நிதானய** — திகதி: 15.07.2025; சீட்டிழுப்பு இலக்கம்: 1921; ஆங்கில எழுத்து: O; வெற்றி இலக்கங்கள்: 35 40 58 81; விசேட எழுத்து: O

**அத சம்பத** — திகதி: 15.07.2025; சீட்டிழுப்பு இலக்கம்: 0466; ஆங்கில எழுத்து: U; வெற்றி இலக்கங்கள்: 9 9 8 8

**சுப தவசக்** — திகதி: 15.07.2025; சீட்டிழுப்பு இலக்கம்: 0007; வெற்றி இலக்கினம்: துலாம்; வெற்றி இலக்கங்கள்: 03 05 06 17

# பயங்கரவாதத் தடைச்சட்டக் கைதில் இன, மதப் பாகுபாடு பாா்ப்பதில்லை

## அமைச்சர் நளிந்த தெரிவிப்பு

கொழும்பு, ஜுலை 16

**பயங்கரவாதத் தடைச்சட்டம் இனம் மற்றும் மதத்தை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்தப்படுவதில்லை. அதேபோல அந்தச் சட்டம் வெகுவிரை விலேயே நீக்கப்படும் என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.**

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் முஸ்லிம்கள் மட்டுமே கைது செய்யப்படுகின்றனர் எனக் கூறப்படும் கருத்தை ஏற்கமுடியாது. அவ்வாறானதொரு விம்பத்தை சமூகத்தில் ஏற்படுத்த முற்படவும் கூடாது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் ஒருவரைக் கைதுசெய்ய வேண்டுமெனில் அந்த விடயத்தில் இனம் மற்றும் மதம் என்பன தாக்கம் செலுத்தாது. விசாரணை நடவடிக்கை என்பதே முக்கியமானது. பயங்கரவாதத் தடைச்சட்டமானது இனத்தை அடிப்படையாகக்கொண்டு பயன்படுத்தப்படுவதில்லை. பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்பில் எமக்கு விமர்சனம் உள்ளது. அந்தச்சட்டத்தைநீக்குவதற்குக் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. அந்தக் குழுவின் பரிந்துரைகள்கிடைக்கப்பெற்றதும் அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும். அதுவரை நடைமுறையில் உள்ள சட்டத்தைத்தான் பயன்படுத்தநேரிடும்- என்றார். (ச-44)

**சுபிரி தன சம்பத** — திகதி: 15.07.2025; தினம்: செவ்வாய்க்கிழமை; வெற்றி வாரம்: 0599; ஆங்கில எழுத்து: Q; வெற்றி இலக்கம்: 6 2 7 2 4 8

**Super Ball** — திகதி: 15.07.2025; தினம்: செவ்வாய்க்கிழமை; சீட்டிழுப்பு வாரம்: 2865; ஆங்கில எழுத்து: D; வெற்றி இலக்கம்: 08 11 34 39

**சனிதா** — திகதி: 15.07.2025; தினம்: செவ்வாய்க்கிழமை; ஆங்கில எழுத்து: E; வெற்றி இலக்கம்: 03 11 47 65; வெற்றி வாரம்: 5026

**SASIRI** — திகதி: 15.07.2025; தினம்: செவ்வாய்க்கிழமை; வெற்றி வாரம்: 0726; வெற்றி இலக்கம்: 13 31 34

**லக்ன ராசி** — திகதி: 15.07.2025; தினம்: செவ்வாய்க்கிழமை; விருட்சிகம்; வெற்றி இலக்கம்: 37 49 53 62; சீட்டிழுப்பு வாரம்: 4577

**KAPRUKA** — திகதி: 15.07.2025; தினம்: செவ்வாய்க்கிழமை; ஆங்கில எழுத்து: E; சுப்பர் இலக்கம்: 10; வெற்றி இலக்கம்: 37 38 46 63; வெற்றி வாரம்: 2041

**அத கோடிபதி** — திகதி: 15.07.2025; தினம்: செவ்வாய்க்கிழமை; ஆங்கில எழுத்து: R; வெற்றி இலக்கம்: 15 16 48 68; வெற்றி வாரம்: 2691

# அஜித்துக்குப்பதில் மரிக்கார்

கொழும்பு, ஜுலை 16

உட்கட்டமைப்பு மற்றும் மூலோபாய மேம்பாடு தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவராக எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் நேற்று நியமிக்கப்பட்டுள்ளார் என நாடாளுமன்ற ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சில நாள்களுக்கு முன்பு அஜித் பி. பெரேரா பதவியில் இருந்து விலகிய நிலையில் அந்த இடத்துக்கு மரிக்கார் நியமிக்கப்பட்டுள்ளார். (ச-இ)

# தாதியர் சேவைக்கு ஆட்சேர்ப்பு

## இவ்வாரத்தில் வர்த்தமானி

கொழும்பு, ஜுலை 16

தாதியர் சேவையில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கான ஆட்சேர்ப்புக்கு இரண்டு வர்த்தமானி அறிவிப்புகள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வெளியிடப்படும் என்று சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அதன்படி, 2020 முதல் 2022 வரை க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றியவர்களில் 2 ஆயிரத்து 650 பேரையும், தாதியர் பட்டம் பெற்ற 850 பட்டதாரிகளையும் தாதியர் சேவையில் இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர் தெரிவித்தார். (ச-இ)



# அறிவிப்பாளர் சத்தியா மாரடைப்பால் மரணம்

யாழ்ப்பாணம், ஜுலை 16

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் 'புலிகளின் குரல்' வானொலியின் பிரபல அறிவிப்பாளராகச் செயற்பட்ட சத்தியா (சிவசுப்பிரமணியம் ஞானகரன்) மாரடைப்பால் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை காலமானார்.

1990ஆம் ஆண்டில் புலிகளின் வானொலி தொடங்கி முதலாவது செய்தி ஒலிபரப்பின் ஊடாக மக்களுக்கு அறிமுகமான இவர், மக்கள் மத்தியில் பிரபலமானவராக இருந்தார். இவர் நிதர்சனம், ஒளிவீச்சு போன்றவற்றில் பல்வேறு நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கியிருந்தார்.

2003ஆம் ஆண்டிலிருந்து ஊடகத்துறையிலிருந்து ஒதுங்கிய அவர் பகுதி நேர ஆங்கில ஆசிரியராகவும் பின்னர் ஆசிரியராகவும் செயற்பட்டுவந்தார். அண்மையில் விபத்து ஒன்றில் சிக்கிக் காயமடைந்த அவர், மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில், மாரடைப்பால் காலமானார். (ச-இ)

# பங்குச் சந்தை அதி வளர்ச்சி

கொழும்பு, ஜுலை 16

கொழும்பு பங்குச் சந்தையின் அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண், வரலாற்றில்முதன்முறையாக நேற்றுமுன்தினம் 19,000 புள்ளிகளைக் கடந்ததாக பங்குச் சந்தை அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

இந்த வளர்ச்சியின் மூலம் முதலீட்டாளர்களின் நம்பிக்கையும் சந்தையின் புள்ளிவிவர ரீதியான நிலைமையும் வலுவடைந்துள்ளதாக பங்குச் சந்தை வட்டாரங்கள் மதிப்பீடு செய்துள்ளன. நேற்றைய வர்த்தக நாளில் இதுவரை பதிவான மொத்த வர்த்தகப் புரள்வு ரூ.1.29 பில்லியனைத் தாண்டியுள்ளதாகவும் கொழும்பு பங்குச்சந்தை மேலும் தெரிவித்துள்ளது. (ச-இ)



## செப்ரெம்பர் முதல்

# போக்குவரத்து அபராதம் ஒன்லைனில் செலுத்தலாம்

கொழும்பு, ஜுலை 16

இணையவழியில் நேரடியாக போக்குவரத்து அபராதம் செலுத்தும் வசதி செயற்படுத்தப்படவுள்ளதாக தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்ப நிறுவனத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் ஹர்ஷ புரசிங்க அறிவித்துள்ளார்.

இதற்கு அமைச்சரவை ஒப்புதல் கிடைத்துள்ள நிலையில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முதல் இந்த வசதி நடைமுறைக்கு வரவுள்ளது.

டிஜிற்றல் பொருளாதார அமைச்சில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு ஆதரவளிப்பதில் ஈரான் உறுதியுடன் செயற்படும்

## அந்தநாட்டுத் தூதுவர் தெரிவிப்பு

**கொழும்பு, ஜூலை 16**

**பொருளாதார அபிவிருத்தி மற்றும் சர்வதேச தளங்களில் இலங்கைக்கு ஆதரவு வழங்குவதில் ஈரான் உறுதியுடன் இருக்கின்றது என்று ஈரான் இஸ்லாமியக் குடியரசின் இலங்கைக்கான தூதுவர் கலாநிதி அலிரெசா டெல்கோஷ் தெரிவித்துள்ளார்.**

இலங்கை - ஈரான் நாடாளுமன்ற நட்புறவுச்சங்கத்தை மீள உருவாக்குவதற்கான கூட்டம் சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் அண்மையில் நாடாளுமன்றத்தில் நடைபெற்றது.

அதில் விருந்தினராகக் கலந்துகொண்ட இலங்கைக்கான ஈரான் தூதுவர் கலாநிதி அலிரெசா டெல்கோஷ் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நட்புறவுச்சங்கத்தின் புதிய உறுப்பினர்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்த ஈரான் நாட்டின் இலங்கைக்கான தூதுவர், ஈரான் மக்களிடையே இலங்கை விசேட கௌரவத்தைப் பெற்றுள்ளது.

மீள உருவாக்கப்பட்டுள்ள நட்புறவுச்சங்கம் வலுவான நாடாளுமன்ற ஒத்துழைப்பு மற்றும் மக்களுக்கிடையிலான தொடர்புகளை வளர்க்கும் என்றும் தெரிவித்தார்.

பத்தாவது நாடாளுமன்றத்துக்கான இலங்கை - ஈரான் நாடாளுமன்ற நட்புறவுச்சங்கத்தின் தலைவராகச் சுற்றாடல் அமைச்சர் ஸ்ரீ தம்மிக பட்டபெந்தி தெரிவுசெய்யப்பட்டார். (எ-இ)

# 181 இந்திய மீனவர்கள் நடப்பாண்டில் கைது

கொழும்பு, ஜூலை 16

நடப்பாண்டில் இதுவரை இலங்கைக் கடல் எல்லைக்குள் மீன்பிடித்த குற்றச்சாட்டில் 181 இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அத்துடன் 24 இந்திய மீன்பிடிப் படகுகளும் தடுத்துவைக்கப்பட்டுள்ளன என்று கடற்படை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# சமூகச் செயற்பாட்டாளர் விசாரணைக்கு அழைப்பு

திருகோணமலை, ஜூலை 16

திருகோணமலை, தம்பலகாமத்தைச் சேர்ந்த அரசியல், சமூகச் செயற்பாட்டாளர் ஒருவர் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுக்கு விசாரணைக்காக அழைக்கப்பட்டுள்ளார். அவருக்கான அழைப்பாணை நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டு தியாகி திலீபனின் நினைவேந்தல் ஊர்தி திருகோணமலை நகருக்கு வந்தபோது சர்தாபுரம் என்ற இடத்தில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் பாதிக்கப்பட்டவரே விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார். இவர் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி சார்பாகக் கடந்த நாடாளுமன்றத் தேர்தலிலும் போட்டியிருந்தார். (எ-இ)




# மகாபொல சீட்டிழுப்பில் 75 கோடி ரூபா நட்டம்!

கொழும்பு, ஜூலை 16

2023ஆம் ஆண்டில் ஒப்பந்த அடிப்படையில் 2 வருடங்களுக்கு வர்த்தகக் கண்காட்சி உத்தியோகத்தர்களை நியமித்தல், நிகழ்நிலை சீட்டிழுப்புக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட சீட்டிழுப்பாளர் அதிலிருந்து விலகியமை போன்றன காரணமாக மகாபொல நிதியத்துக்கு 750 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளமை கோப் குழுவுக்கு தெரியவந்துள்ளது.

அதற்கமைய இதில் தவறிழைத்தவர்களுக்கு உரிய தண்டனை வழங்கப்படவேண்டும் . எதிர்காலத்தில் இதுபோன்ற சட்டவிரோத அல்லது மோசடியான செயற்பாடுகள் இடம்பெறாது தடுத்துநிறுத்தப்படவேண்டும் என்று வலியுறுத்திய கோப் குழு இதுதொடர்பில் தடயவியல் கணக்காய்வு நடத்தித் தேவையான நடவடிக்கை எடுக்குமாறும் அதிகாரிகளுக்குப் பணித்துள்ளது. (ச-இ)



# பிரசன்னவுக்கு மறியல் நீடிப்பு

கொழும்பு, ஜூலை 16

முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீரவை எதிர்வரும் 28 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

2010ஆம் ஆண்டில் போலி ஆவணங்களைத் தயாரித்து கிரிபத்கொடப் பிரதேசத்திலுள்ள அரச காணி ஒன்றை விற்பனை செய்த சம்பவம் தொடர்பில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீரவைக் கைதுசெய்யுமாறு நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது. அவர் கடந்த மே மாதம் 7ஆம் திகதி நீதிமன்றத்தில் சரணடைந்ததையடுத்து கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# நிஷாந்தவுக்குப் பிணை

கொழும்பு, ஜூலை 16

ஊழல் குற்றச்சாட்டில் இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவால் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் முன்னாள் தலைவர் நிஷாந்த விக்ரமசிங்கவைப் பிணையில் விடுவிக்க கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டுள்ளது. (ச-இ)



# புதினம் தெரியுமோ?

## பொல்லைக்குடுத்து வாங்கின அடி

**பொல்லைக்குடுத்து அடிவாங்கிறது எண்டு கேள்விப்பட்டிருப்பியள். ஆனால் நேரில கண்டிருக்கமாட்டியள். அந்தக்குறையை வவுனியா கூமாங்குளத்தில இருக்கிற 'குடிமக்கள்' சிலர் தீர்த்து வைச்சிருக்கினம்.**

எப்பவுமே பொலிஸ்காரருக்கு சம்பளத்தைவிட கிம்பளத்தில தான் வருமானம்கூட. அதுவும் குடிச்சுப்போட்டு மோட்டார்சைக்கிளில போறவையைப் பிடிச்சால் அள்ளுகொள்ளையாக் கறக்கலாம். அதால பொலிஸ்காரருக்குக் கையைக் கடிச்சால், 'சாராய பார்' இருக்கிற இடங்களுக்குக் கிட்ட ஒளிச்சு நிப்பினம். பாரில குடிச்சுப்போட்டு வாறவையை அப்பிடியே அமுக்கி, அவையிட்ட கறக்க வேண்டியதைக் கறந்திட்டு 'சின்னப் பைன்' போட்டு அனுப்பி விடுவினம். கன இடங்களில அப்பிடித்தான் நடக்கிறது. போனகிழமை கூமாங்குளம் 'பாருக்கு' பக்கத்தில பெரும் பதற்றம். என்ன, ஏதெண்டு விசாரிச்சால் அங்க நிண்டவை ஒரு கதை சொல்லிச்சினம்.

கூமாங்குளம் பாருக்குப் பக்கத்தில நிண்ட பொலிஸ்காரர், தூரத்தில ஒரு மோட்டார் சைக்கிள் வாறதைக் கண்டிட்டு "இண்டைக்கு இரை சிக்கிட்டுது" எண்டு நினைச்சுக்கொண்டு நடுறோட்டிலடக்கெண்டு ஏறி கையைக் காட்டி மறிச்சவையாம். மின்னாமல் முழங்காமல் திடீரெண்டு பொலிஸ் வந்து கையைக் காட்டினதால, மோட்டார் சைக்கிளில வந்தவரால உடன நிப்பாட்ட முடியேலையாம். அதைப் பொலிஸ்காரர் பார்த்திட்டு உடனே காட்டுத்தடி ஒண்டை அவரின்ர மோட்டார் சைக்கிளின்ர பின்சில்லுக்க குத்திக் கொளுவிட்டினமாம். "சில்லுக்க தடிபோனவுடன மோட்டார் சைக்கிள் பலன்ஸ் இல்லாமல் தடுமாறி அப்பிடியே பாறுண்டு விழ, அதில இருந்தவரும் அப்பிடியே மல்லாக்கா விழ, அவருக்குக் கீழ கிடந்த ஏதோவொண்டு தலையில இறுக்கி அடிச்சு, அந்த ஆளின்ர சீவன் அதிலையேபோட்டுதாம்" எண்டு இவ்வளத்தையும் கண்ணால கண்டமாதிரி சிலர் சொல்ல, அது நெருப்புப் பத்தினமாதிரி ஊர்முழுக்கப் பரவிட்டுது.

அந்தநேரம் பார்த்தும் ரண்டு பொலிஸ்காரரும் அங்க வந்திருக்கினம். அங்கநிண்ட "குடிமக்களும்" அவையின்ர கதையை நம்பிக் கூட்டம் கூடினவையும் அந்தப் பொலிஸ்காரரை வெளுக்கத் தொடங்கிட்டினம். அடி தாங்கமுடியாமல் பொலிஸ்காரர் ரண்டு பேரும் ஓடிப்போய் ஆஸ்பத்திரியில படுத்திட்டினம். "ரண்டு பொலிஸ் ஆக்களுக்கு சனங்கள் அடிக்குதுகள்" எண்டு கேள்விப்பட்டதும், பொலிஸ்காரரைக் காப்பாத்திக் கூட்டிக்கொண்டு போக, இன்னொரு பொலிஸ் அதிகாரி வந்திருக்கிறார், ஏற்கனவே "அப்பாவி ஒருத்தரை அநியாயமா பொலிஸ் சாக்கொண்டு போட்டுதே" எண்ட கோபத்தில இருந்த சனங்கள், இந்தப் பொலிஸ் அதிகாரியைப் பிடிச்சு வைச்சுக்கொண்டு போராட்டம் நடத்தியிருக்கினம். நிலைமையைக் கட்டுப்பாட்டுக்க கொண்டாறதுக்காக வவுனியாப் பொலிஸ் பெரியவர் வந்தும் சனம் இறங்கிவரேலை. கடைசியா கலகமடக்கிற பொலிஸ்காரர் வந்து, மேல்வெடி வைச்சு எல்லாரையும் கலைச்ச பிறகுதான் செத்தவரின்ர 'பொடியை'எடுக்கமுடிஞ்சுது. இப்ப என்னெண்டால் போஸ்ட்மட்டத்தில அவர் 'ஹார்ட் அட்டாக்' வந்துதான் செத்திருக்கிறார் எண்டது உறுதியாகியிருக்கு. அதோட மோட்டார் சைக்கிள் ஓடிக்கொண்டிருக்கேக்க, கட்டையால சில்லுக்கு எறிஞ்சால் மோட்டார்சைக்கிள் சில் சுத்திற வேகத்தில ஒண்டில் கட்டை தெறிச்சு அங்கால விழுந்திருக்கும், இல்லாட்டி சில்லின்ர கம்பியளையாவது உடைச்சுக்கொண்டுதான் அதுக்க போய் செருகியிருக்கும். ஆனால் அப்பிடி ஒண்டுமேயில்லாமல் கட்டை சில்லுக்க செருகுப்பட்டுக் கிடக்க, ஒரு கம்பியிலயும் சின்ன நெளிவுகூட இல்லை. அப்ப ஆரோ இதைப் பிரச்சினையா மாத்திறதுக்கு மோட்டார் சைக்கிளுக்குள்ள கட்டையைச் செருகிப் போட்டு, பழியைத் தங்களில போட்டிருக்கினம் எண்டு பொலிஸ் சொல்லுது. தங்களிட்ட பொலிஸ்காரர் காசு கறக்கினம் எண்ட கறுவியத்தில அந்த பாருக்கு வந்துபோற நிரந்தர வாடிக்கையாளர்மார்தான் இப்பிடிச் செய்திருக்கலாம் எண்டும் டவுட். இப்ப மூண்டுபேரை பொலிஸூக்கும், பொலிஸ் வாகனத்துக்கும் அடிச்சதெண்டு சொல்லி அரெஸ்ட் பண்ணி இருக்கினம். இன்னும் பதினாலு பேரைத் தேடிக்கொண்டிருக்கினமாம். சும்மா கிடந்த சங்கை ஊதிக்கெடுத்தால் இப்பிடித்தான் ஆகும் கண்டியளோ.

padsi@uthayan.com

- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** இன்று புதிய முயற்சி எதையும் மேற்கொள்ளவேண்டாம். உறவினர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது பொறுமை மிகவும் அவசியம். ஒரு சிலருக்குத் திடீர்ச் செலவுகளால் கடன்வாங்க நேரிடும். பிற்பகலுக்கு மேல் மனதில் இனந்தெரியாத உற்சாகம் ஏற்படக்கூடும்.

**இடபம்:** எதிர்பார்த்த பணம் கைக்குக் கிடைக்கும். வீட்டில் உள்ளவர்கள் உங்கள் ஆலோசனையைக் கேட்டுச் செயற்படுவார்கள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணைவழியில் எதிர்பார்த்த நல்ல செய்தி இன்று கிடைக்கும்.

**மிதுனம்:** உற்சாகமான நாள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் பெரியவர்களின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். எதிரிகளின் சூழ்ச்சிகளை முறியடிக்கும் திறன் அதிகரிக்கும். பிள்ளைகளின் பிடிவாதப்போக்கு மாறி உங்கள் விருப்பப்படி நடந்து கொள்வார்கள்.

**கடகம்:** காலையில் வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவைப்படும். பிள்ளைகளால் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். உணவு தொடர்பான ஒவ்வாமை ஏற்படக்கூடும் என்பதால், வெளியிடங்களில் சாப்பிடுவதைத் தவிர்ப்பது நல்லது. வெளியூர்ப்பயணத்தை தவிர்க்கவும்.

**சிம்மம்:** தாயின் உடல்நலனில் கவனம் தேவை. தாய்வழி உறவினர்களால் செலவுகள் ஏற்படக்கூடும். மனதில் அடிக்கடி சோர்வு ஏற்பட்டு நீங்கும். பிற்பகலுக்கு மேல் உற்சாகத்துடன் காணப்படுவீர்கள். அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரித்தாலும், சக பணியாளர்கள் உதவிசெய்வார்கள்.

**கன்னி:** தேவையான பணம் கைக்குக் கிடைக்கும். மனதில் உற்சாகமும் தைரியமும் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணை உங்கள் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்வார். மாலையில் குடும்பத்தினருடன் நண்பர் அல்லது உறவினர் வீட்டு விசேஷத்தில் கலந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்படும்.

**துலாம்:** அரசாங்கக் காரியங்களில் தடை, தாமதம் ஏற்படும். அதிகாரிகளிடம் பக்குவமாகப் பேசி காரியம் சாதித்துக்கொள்ள முயற்சி செய்யவும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். வீண் செலவுகள் ஏற்படக்கூடும்.

**விருச்சிகம்:** மனதில் உற்சாகம் ஊற்றெடுக்கும். புதிய முயற்சி சாதகமாகமுடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிக்கு ஆதரவாக இருப்பார். கணவன் மனைவிக்கிடையே இருந்த கருத்துவேறுபாடு நீங்கி மகிழ்ச்சி உண்டாகும்.

**தனுசு:** உற்சாகமான நாள். குடும்பத்தில் சிறுசிறு சலசலப்புஏற்பட்டாலும், சமயோசிதமாக சமாளித்துவிடுவீர்கள். தேவையான பணம் இருந்தாலும் தேவையற்ற செலவுகளும் ஏற்படக்கூடும் என்பதால் கையிருப்புக் கரையும். சிலர் கடன்வாங்கவும் நேரிடும்.


**மகரம்:** மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும். தேவையான பணம் கிடைக்கும். உறவினர்கள் சிலர் உங்கள் ஆலோசனையைக் கேட்டுவருவார்கள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**கும்பம்:** குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவுகள் எதையும் இன்றைக்கு எடுக்கவேண்டாம். தந்தைவழி உறவுகளால் செலவுகள் ஏற்படும். உறவினர்கள் வருகையால் வீட்டில் உற்சாகம் ஏற்படும். கல்லூரிக் கால நண்பர்களைச் சந்தித்து மகிழும் வாய்ப்பு ஏற்படும்.

**மீனம்:** சகோதரவகையில் எதிர்பார்த்த காரியம் சாதகமாகமுடியும். உறவினர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்படக்கூடும் என்பதால் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். சிலருக்குப் புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் வாய்ப்புஏற்படும். எதிர்பாராத செலவுகளால் கையிருப்புக் கரையும்.

# சிவபூமி திருவாசக அரங்கம் திங்களன்று திறந்துவைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 16



நாவற்குழி சிவபூமி திருவாசக அரண்மனையில் அமைக்கப்பட்டுள்ள சிவபூமி திருவாசக அரங்கத்தின் திறப்புவிழா வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் பங்கேற்புடன் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது. மருத்துவக் கலாநிதி சண்முகநாதன் அருந்ததி தம்பதிகளின் நினைவாக மருத்துவ நிபுணர் மனோமோகன் சிவகௌரி தம்பதிகளால் இந்த அரங்கம் நிறுவப்பெற்றுள்ளது. நிகழ்வில் சிறப்பு விருந்தினராக வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன், கௌரவ விருந்தினராக யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குனராஜா ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-41-28,159,66)



வரலாற்றுச் சிறப்புமிக்க மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி ஆலய மஹோற்சவப் பெருந்திருவிழாவின் 15ஆவது மாலைத் திருவிழாவான கைலாசவாகனத் திருவிழா நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு சிறப்புறவும், மிகவும் பக்திபூர்வமாகவும் நடைபெற்றது. (ச-66)

## மன்னாரில் ஆடிப்பிறப்பு; நாளை கோலாகலம்

மன்னார், ஜூலை 16

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் பண்பாட்டலுவல்கள் அலகின் அனுசரணையுடன் மன்னார் மாவட்டச் செயலகத்தினால் வருடாந்தம் நடத்தப்படும் மன்னார் மாவட்ட மட்டத்திலான ஆடிப்பிறப்பு விழா நிகழ்வுகள் இம்முறை மன்னார் திருக்கேதீஸ்வரம் பகுதியில் அமைந்துள்ள மன்னார் கௌரியம்பாள் தமிழ் மகாவித்தியாலயத்தில் நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ளன.

ஆடிப்பிறப்புக் கொண்டாட்டம் சமூகமயப்பட்ட நிகழ்வுகளாக நடத்தப்படல் வேண்டும் என்ற சிந்தனைக்கு அமைவாக இந்த நிகழ்வு இம்முறை ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டச் செயலக உதவி மாவட்டச் செயலாளர் பு.டிலிசன் பயஸ் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் மன்னார் மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். ஆடிப்பிறப்புப் பற்றிய சிறப்புச் சொற்பொழிவை பாடசாலை ஆசிரியை மு.கனக துர்க்கா நிகழ்த்துவார். (ச-60)

## மின் தாக்கிய அலுவலருக்கு நல்லூர்ப் பிரதேசசபை உதவி

யாழ்ப்பாணம், ஜூலை 16

நல்லூர்ப் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட கொக்குவில்பகுதியில்பழுதடைந்ததெருமின்விளக்குகளைப் பழுதுபார்க்கும்போது மின்சாரம் தாக்கிக் காயமடைந்த நல்லூர்ப் பிரதேசசபையின் பணியாளருக்கு மனிதாபிமான உதவியாக ஒரு தொகைப் பணம் வழங்கிவைக்கப்பட்டது. நல்லூர்ப் பிரதேச சபையின் தவிசாளர் ப.மயூரன், சபையின் செயலாளர் யு.ஜெலீபன் மற்றும் சபை உறுப்பினர்களின் பங்களிப்புடன் இந்த உதவித்தொகை நேற்று செவ்வாய்க்கிழமை வழங்கிவைக்கப்பட்டது. (ச-25,20, 66)




### வவுனியா நகர்ப் பகுதியில்

## மக்களுக்கு இடையூறாக இருந்த நடைபாதைக் கடைகள் அகற்றம்!

வவுனியா, ஜூலை 16

வவுனியாவில் நடைபாதை வியாபாரக் கொட்டகைகளை அகற்ற வவுனியா மாநகரசபை நடவடிக்கை எடுத்துள்ளது. போக்குவரத்துக்கும், மக்கள் நடமாட்டத்துக்கும் இடையூறாக அமைக்கப்பட்டுள்ள நடைபாதை வியாபாரக் கொட்டகைகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று மாநகர சபை முதல்வர் சு.காண்டீபன் தெரிவித்துள்ளார். இலுப்பையடி மற்றும் மருத்துவமனை சுற்றுவட்ட வீதியில் அமைக்கப்பட்டிருந்த நடைபாதை வியாபாரக் கொட்டகைகளே அகற்றப்படவுள்ளன. அதற்கு நடைபாதை வியாபாரிகள் எதிர்ப்புத் தெரிவித்துப் போராட்டம் நடத்தியதுடன், மாநகரசபை உறுப்பினர்களுடன் முரண்பட்டனர். தங்களுக்கு அவகாசம் வழங்கப்படவேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தினர்.

நடைபாதை வியாபாரக் கொட்டகைகளை அகற்ற ஏற்கனவே போதுமான அவகாசம் வழங்கப்பட்டிருந்தது. கடந்த ஏப்ரல் மாதத்துடன் அவை அகற்றப்படும் என்று தெரிவித்திருந்தபோதும், தற்போதுவரை அவை அகற்றப்படவில்லை. ஆகையால் இனிமேலும் கால அவகாசம் வழங்கமுடியாது என்று மாநகர முதல்வர் தெரிவித்தார். அதையடுத்து அங்கு பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினர்



அழைக்கப்பட்டனர். பொலிஸாரும் தலையிட்டு வியாபாரக் கொட்டகைகளை அகற்றுமாறு அறிவுறுத்தினர். அதன்பின்னர் நடைபாதை வியாபாரக் கொட்டகைகள் அகற்றப்பட்டன. (எ-110,18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

ஒவ்வொரு மனிதனும் தனக்குத்தானே தேர்ந்தெடுத்துக்கொள்ளும் ஒவ்வொரு செயலின் குணங்களைப் பொறுத்துத்தான் அவனுடைய எதிர்கால வெற்றி தோல்விகள் கணிக்கப்படும்.


– டார்வின் –

# தென்னைகளைக் காப்போம்

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மட்டும் சுமார் ஒன்றரை இலட்சம் தென்னைகள் வெள்ளை ஈ தாக்கத்தால் பாதிப்படைந்துள்ளன என்று தென்னை பயிர்ச்செய்கைச் சபையின் தரவுகள் கூறுகின்றன. அவ்வாறெனில் வடக்கு மாகாணத்தில் வெள்ளை ஈ தாக்கத்தால் பாதிப்படைந்த தென்னைகளின் எண்ணிக்கை மிகப்பெரிய தொகையாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. பல இலட்சம் தென்னைகளின் பாதிப்பு என்பது சாதாரணமாகக் கடந்து செல்லக்கூடிய விடயமல்ல. வரும் காலத்தில் இது வடக்கில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது நிச்சயம்.

போரின்போது வடக்கில் தென்னைகளும், பனைகளும் எறிகணைத் தாக்குதல்கள், குண்டுவீச்சுகளால் அதிகளவில் அழிவுற்றிருந்தன. போர் முடிவுற்ற பின்னர் அதை ஈடுகட்டும் வகையிலான நடவடிக்கைகள் காத்திரமான முறையில் முன்னெடுக்கப்படவில்லை. இன்னும் சொல்லப்போனால் பனைகள், தென்னைகள் கட்டுப்பாடற்ற வகையில் சட்டவிரோதமாக அழிக்கப்படும் நிலைமையே வடக்கில் தொடர்ந்துகொண்டிருக்கின்றது. வடக்குக்குக் கணிசமான வருமானத்தை ஈட்டித்தரக்கூடிய தென்னைச் செய்கையை மேம்படுத்துவதற்கு முறையான திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவும் இல்லை. போரின் பின்னர் அதிக தென்னைகளை வெள்ளை ஈ காவுகொண்டிருக்கின்றது. வெள்ளை ஈ தாக்கம் தென்னைகளில் அவதானிக்கப்பட்டு சில ஆண்டுகளாகின்றபோதும், இதுவரையில் அதைக் கட்டுப்படுத்துவதற்கு எந்த நடவடிக்கையும் வடக்கில் முன்னெடுக்கப்பட்டதாக இல்லை. வெள்ளை ஈயைக் கட்டுப்படுத்த ஆலோசனைகள் வழங்கப்படுகின்றபோதும் தென்னைச் செய்கையாளர்களும், பொதுமக்களும் அவற்றை நடைமுறைப்படுத்துவதில் எதிர்கொள்ளும் சிரமங்கள் வெள்ளை ஈ தாக்கம் பரவலடையவும், தீவிரமடையவும் வழியேற்படுத்திக் கொடுத்திருக்கின்றன. வெள்ளை ஈயின் தாக்கத்துக்கு இலக்காகும் தென்னைகள் அழிவடைவடைவதையும், அவற்றின் விளைச்சல் வீதம்சடுதியாகக் குறைவடைவதையும் கண்முன்னே கண்டுகொண்டிருக்கிறோம்.

வெள்ளை ஈ தாக்கத்தைத் தடுப்பதற்கு தற்போது நடவடிக்கைகள் யாழ். மாவட்டத்தில் பிரதேச செயலகங்கள் ஊடாக ஆரம்பிக்கப்பட்டாலும் அவை எந்தளவுக்கு வெற்றியளிக்கும் என்பதைக் கணிக்கமுடியாது. வெள்ளை ஈ தாக்கத்தைக் கட்டுப்படுத்துவது பிரதேச மக்களை இணைத்து அவர்களின் பங்களிப்புடன் திட்டங்கள் தொடர்ச்சியாகச் செயற்படுத்தினால் மட்டுமே சாத்தியமாகும். அதற்கான சாத்தியமான திட்டங்களைத் துறைசார்ந்தவர்கள் உடனடியாக வகுப்பதும், செயற்படுத்துவதும், மக்களை அந்தத் திட்டங்களில் உள்வாங்குவதும் அவசியமானது. அதேபோன்று வெள்ளை ஈயைக் கட்டுப்படுத்துவதற்கான உபகரணங்கள்மக்களுக்கு இலகுவாகக்கிடைப்பதற்குரிய வாய்ப்புகளையும் உருவாக்கிக்கொடுப்பதும் முக்கியமானது. தென்னைகளின் பாதிப்புகளை கருத்தில் எடுக்காமல் தொடர்ந்தும் செயற்பட்டால் வடக்கு பெரும் பாதிப்புகளை எதிர்காலத்தில் சந்திக்கவேண்டியிருக்கும். வடக்குக்குக் கணிசமான வருமானத்தைக் கொண்டுவரக்கூடிய தென்னைச் செய்கை அடியோடு பாதிப்படையும் அபாய நிலையும், தேங்காய்க்காக வெளிப்பிரதேசங்களை நம்பியிருக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமையும் ஏற்படலாம். இது வடக்கு மக்களுக்கு பொருளாதார ரீதியில் பெரும் சரிவையும் உண்டாக்கக்கூடும். ஆகையால் தென்னைகளை அழிக்கும் வெள்ளை ஈ தாக்கத்தைக் கட்டுப்படுத்த அனைவரும் ஒன்றியணையவேண்டும். அதன்மூலமே வடக்கின் வளங்களை அழியாமல் பாதுகாக்கமுடியும்.




## பரிந்துரைகளை மீறிச் செயற்படின் அதிகாரிகள்மீது கடும் நடவடிக்கை

### மனித உரிமைகள் ஆணைக்குழு எச்சரிக்கை



கொழும்பு, ஜூலை 16

**ஆணையகத்தின் பரிந்துரைகளைச் செயற்படுத்தத் தவறும் பொது அதிகாரிகள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று மனித உரிமைகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.**

அதன்படி, அனைத்து அமைச்சகச் செயலாளர்கள், மாகாணத் தலைமைச் செயலாளர்கள், மாகாண சபைகளின் செயலாளர்கள், துறைத்தலைவர்கள் மற்றும் சட்டபூர்வ அமைப்புகள் மற்றும் நிறுவனங்களின் தலைவர்களுக்கு இந்தக் கடமை குறித்து தெரிவிக்க ஆணையகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணையச் சட்டத்தின்கீழ் கட்டளையிடப்பட்டுள்ளபடி, பரிந்துரையில் குறிப்பிடப்பட்டுள்ள காலக்கெடுவுக்குள், தாங்கள் எடுத்த அல்லது எடுக்க விரும்பும் நடவடிக்கைகளை அதிகாரிகள் ஆணையத்துக்குத் தெரிவிக்கவேண்டும்.

சில சந்தர்ப்பங்களில், சில அதிகாரிகளும் நிறுவனங்களும் பரிந்துரைகளை செயற்படுத்தத் தவறியமையே நிலுவையில் உள்ள மேல்முறையீடுகளின் செயலற்ற தன்மைக்குக் காரணமாக இருக்கின்றது. எனவே, எந்தவொரு அதிகாரியோ அல்லது நிறுவனமோ பரிந்துரைகளைச் செயற்படுத்தத் தவறினால், ஆணையத்தின் சட்ட அல்லது நிர்வாக நடவடிக்கைகளின் விளைவுகளுக்கு அவர்கள் பொறுப்பேற்கவேண்டியிருக்கும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (ச-இ)

## மகேஷிக்குப் பிணை

கொழும்பு, ஜூலை 16

ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்ட ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையின் சிறப்பு நரம்பியல் அறுவைச் சிகிச்சை நிபுணர் மகேஷி விஜேரத்ன பிணையில் விடுவிக்கப்பட்டார். கொழும்பு தலைமை நீதிபதி தனுஜா லக்மாலி ஜெயதுங்க, சந்தேகநபரை 50ஆயிரம் ரூபா ரொக்கப் பிணை மற்றும் தலா ரூ. 5 மில்லியன் மதிப்புள்ள மூன்று சரீரப் பிணைகளில் விடுவித்துள்ளார். (ச-இ)



## தேயிலை, தேங்காய் ஏற்றுமதி அதிகரிப்பு

கொழும்பு, ஜூலை 16

இந்த ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் தேயிலை மற்றும் தேங்காய் ஆகியவற்றின் ஏற்றுமதி வருவாய் கணிசமாக அதிகரித்துள்ளது.

அதன்படி, கடந்த ஆண்டின் (2024) முதல் ஐந்து மாதங்களில் 565.3 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்த தேயிலை ஏற்றுமதி வருவாய், இந்த ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் 7.9 சதவீதம் அதிகரித்து 610.1 மில்லியன் அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளது.

மேலும், தேங்காய் ஏற்றுமதி வருவாய் கடந்த ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் 158.2 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்த நிலையில், இந்த ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் 25.3 சதவீதம் அதிகரித்து 198.1 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளது. இந்த ஐந்து மாதங்களில் கறுப்புத் தானிய ஏற்றுமதி வருவாய் 55.8 சதவீதம் அதிகரித்து 171.1மில்லியன் அமெரிக்க டொலர்களாக உயர்ந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## 'பாதிய' யானை உயிரிழப்பு

கொழும்பு, ஜூலை 16

காலில் காயங்களுடன் குழியில் இருந்து மீட்கப்பட்டு ஒன்பது நாள்களாக சிகிச்சை பெற்றுவந்த 'பாதிய' என்ற யானை நேற்று செவ்வாய்க்கிழமை உயிரிழந்துள்ளது. (ச-இ)

## பாதுகாவலர்களின் கீழுள்ள சிறாருக்கு உதவித்தொகை!

கொழும்பு, ஜூலை 16

நிறுவனப் பராமரிப்பு, பாதுகாவலரின் கீழுள்ள குழந்தைகள் மற்றும் வீதியோரக் குழந்தைகளுக்கு 5 ஆயிரம் ரூபா உதவித்தொகை வழங்கும் திட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர் சரோஜா சாவித்ரி போல்ராஜ் தெரிவித்துள்ளார். அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்தத் திட்டத்தின்மூலம் 9,191 குழந்தைகள் பயனடைவார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஒதியமலைக் கிராமத்துக்கான போக்குவரத்து இடர் நிவர்த்தி

முல்லைத்தீவு, ஜூலை 16

முல்லைத்தீவு மாவட்டத்தின் தமிழர்களது பூர்வீக எல்லைக் கிராமங்களில் ஒன்றான ஒதியமலைக் கிராம மக்களின் போக்குவரத்து இடர்பாடு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனின் முயற்சியால் தீர்த்துவைக்கப்பட்டுள்ளது.

ஒதியமலைக் கிராமம் தொடக்கம், கிளிநொச்சி வரையான வழித்தட அனுமதிப்பத்திரமுள்ள தனியார் பேருந்து சேவை நீண்டகாலமாக ஒதியமலைக் கிராமத்துக்கு இடம்பெறவில்லை. கிளிநொச்சியிலிருந்து ஒட்டுசுட்டான்வரையிலேயே இந்தப் போக்குவரத்து சேவை இடம்பெற்றிருந்தது. இதனால் ஒதியமலைக் கிராம மக்கள் பெரும் போக்குவரத்து இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்துவந்தனர்.

இந்த நிலையில் ஒதியமலைக்கிராம மக்களால் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனுக்கு தெரியப்படுத்திய நிலையில் இதுதொடர்பில் ஒட்டுசுட்டான் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டினார். அதனையடுத்து தற்போது பேருந்து சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ச-24-6)

# வடக்கு இடமாற்றச் செயன்முறையை வினைத்திறனாக மாற்றுங்கள்!

## இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கம் வடக்கு ஆளுநரிடம் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 16

**வடக்கு மாகாண இடமாற்றக் கொள்கையை வினைத்திறனாக மாற்றியமைப்பதற்கும், ஆசிரிய இடமாற்றங்களைத் தாமதமின்றி நடைமுறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கம் மற்றும் இலங்கை அதிபர் சேவைச் சங்கம் ஆகியன சுட்டிக்காட்டியுள்ளன.**

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற கலந்துரையாடலில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

தேசிய இடமாற்றக்கொள்கையுடன் வடக்குமாகாண இடமாற்றக்கொள்கை சில இடங்களில் ஒத்துச்செல்லவில்லை. வடக்கு மாகாண இடமாற்றக்கொள்கை இன்னமும் வினைத்திறனாக மாற்றியமைக்கப்படவேண்டும் என வலியுறுத்திய ஆசிரிய சேவைச் சங்கத்தினர், சேவையின் தேவை கருதிய இடமாற்றங்கள் வலயக் கல்விப்பணிப்பாளர்களால் வழங்கப்படும்போது அது தொடர்பில் 14 நாள்களுக்குள் இடமாற்ற சபைக்கு அறிவிக்கவேண்டும் என்றும் குறிப்பிட்டனர்.

அத்துடன் இடமாற்றங்களின்போது அரசியற்தலைவீடுகளுக்கு அனுமதியளிக்கவேண்டாம் எனக் கோரிக்கை விடுத்த ஆசிரியர் சேவைச் சங்கத்தினர் அதிபர்கள், ஆசிரியர்களுக்கு எதிரான ஒழுக்காற்று விசாரணைகளைத் துரிதப்படுத்தப்படவேண்டும் எனவும் வலியுறுத்தினர். இதன்போது ஆசிரியர்களால், அதிபர்களால் திணைக்களங்களில் ஒப்படைக்கப்படுகின்ற ஆவணங்களைப் பெற்றுக்கொண்டமைக்கான உறுதிப்படுத்தல் கடிதம் வழங்கப்படவேண்டும் என முன்வைத்த கோரிக்கையை செயற்படுத்துவதாக கல்வி அமைச்சின் செயலர் குறிப்பிட்டார். அதிபர் நியமனங்கள் வழங்கப்பட்டு அதனைப் பொறுப்பேற்காதவர்கள் தொடர்பான விடயமும், அதிபர் வெற்றிடங்கள் காணப்படும் நிலையில் அதனை நிரப்பும் வகையில் அவர்களை உள்வாங்குமாறும் அதிபர் சேவைச் சங்கப் பிரதிநிதிகளால் சுட்டிக்காட்டப்பட்டது. அதிபர்கள் இடமாற்றக்கொள்கை தயாரிக்கும் நடவடிக்கை இடம்பெற்றுவருவதாக கல்வி அமைச்சின் செயலாளர் இதன்போது தெரிவித்தார். கலந்துரையாடலில் இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கத்தின் பொதுச்செயலாளரும் பிரதியமைச்சருமான மஹிந்த ஜயசிங்க, இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கத்தின் தேசிய அமைப்பாளரும், பிரதியமைச்சரு மான பிரதீப் சுந்தரலிங்கம், ஆசிரியர் சேவைச் சங்கத்தின் உபதலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜெகதீஸ்வரன், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் மு.நந்தகோபாலன், வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலர் ம.பற்றிக் டிறஞ்சன், வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் க.பிரட்லி ஜெனட், வடக்கின் அனைத்து வலயங்களினதும் கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-27)



# சிறை உத்தியோகத்தர் வீட்டுக்குத் தீ வைத்த இனந்தெரியாத கும்பல்

யாழ்ப்பாணம், ஜூலை 16

யாழ்ப்பாணம் சிறைச்சாலை உத்தியோகத்தர் ஒருவரின் வீடு இனந்தெரியாத கும்பலால் தாக்கப்பட்டுள்ளது. வீட்டின் முன்பகுதியில் பெற்றோல் ஊற்றி தீ வைத்த அந்தக் கும்பல் அங்கிருந்து தப்பிச்சென்றுள்ளது.

நேற்று அதிகாலை யாழ்ப்பாணம், கொழும்புத்துறையில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது. வீட்டிலிருந்தவர்கள் உறக்கத்தில் இருந்தபோது அத்துமீறி உள்நுழைந்த கும்பல் வீட்டின் முன்பகுதியில் பெற்றோல் ஊற்றித் தீவைத்துள்ளது. தீ கொழுந்துவிட்டெரிந்த நிலையில் வீட்டிலிருந்தவர்கள் உறக்கத்தில் இருந்து எழுந்து தீயை அணைத்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை முன்னெடுத்தனர். (எ-20)

# ஸ்மார்ட்கைபேசிப் பாவனையை மாணவரிடையே கட்டுப்படுத்துக!

## வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம் ஜனாதிபதிக்குக் கடிதம்

யாழ்ப்பாணம், ஜூலை 16

பாடசாலை செல்லும் மாணவர்களிடையேஸ்மார்ட்போன்பாவனையைத் தடைசெய்யவேண்டும் எனக்கோரி வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தினரால் ஜனாதிபதிக்குக் கடிதம் ஒன்று நேற்றுமுன்தினம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது-

நாட்டில் தற்பொழுது புகைப்பொருள் பாவனை குறைவடைந்து இருப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது. ஆனால் போதைப்பொருள் பாவனை அதிகரித்துச் செல்கின்றது. இதனைக் கட்டுப்படுத்துவதற்கு நாம் பாடசாலைமட்டத்திலும் கிராமங்களிலும் செயற்பட்டு வருகின்றோம். ஆனால் போதைப் பாவனை குறைவடைவதை காணக்கூடியதாகத் தெரியவில்லை. இதனால் கூடுதலாக பாதிப்படைவது இளம் சந்ததியினரே. குறிப்பாக மாணவர் சமுதாயமாகும். தற்போது ஒரு படி மேலாக மாணவர்களிடையேஸ்மார்ட்போன் பாவனையையும் காணக்கூடியதாக உள்ளது. இந்தப் பாவனையைப் பாடசாலை மாணவர்கள் மட்டில் கட்டுப்படுத்தவேண்டியது காலத்தின் கட்டாயமாகும் - என்றுள்ளது. (ச-27)



சாவகச்சேரி கோயிற்குடியிருப்பு சந்தனமுதலிச்சிபுலம் முருகமூர்த்தி கோவில் வருடாந்தப் பெருந்திருவிழா நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. (ச-9)



வரலாற்றுச் சிறப்புமிக்க கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் புளியம் பொக்கணை நாகதம்பிரான் ஆலய வருடாந்த மஹோற்சவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. எதிர்வரும் 23ஆம் திகதி தேர்த் திருவிழாவும் 24ஆம் திகதி தீர்த்த உற்சவமும் நடைபெறவுள்ளன. (ச-41)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீதாவாக்க பிரதேசசபை விவகாரம்; மனு தள்ளுபடி

கொழும்பு, ஜூலை 16

சீதாவாக்கப் பிரதேசசபையின் தவிசாளர் மற்றும் உபதவிசாளரைத் தேர்ந்தெடுப்பதற்காக இரகசிய வாக்கெடுப்பு நடத்துவதைத் தடுத்து, மேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் சாரங்கிகா ஜெயசுந்தரவுக்கு இடைக்காலத் தடைவிதிக்கக் கோரி தாக்கல் செய்த மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளாமல் தள்ளுபடி செய்து மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த மனுவை சீதாவாக்கப் பிரதேச சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தாக்கல் செய்திருந்தனர். மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நீதிபதி ரோஹந்த அபேசூரிய மற்றும் நீதிபதி பிரியந்த பெர்னாண்டோ ஆகியோர் அடங்கிய நீதிபதிகள் அமர்வு மனுவைத் தள்ளுபடி செய்தது. இதேவேளை, இந்த விடயங்களை முன்வைத்து மாவதகம மற்றும் சீதாவாக்க நகரசபை சார்பில் சமர்ப்பிக்கப்பட்ட மனுக்களும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. (எ-இ)


## மக்கள் வங்கி

### பிராந்திய தலைமைக் காரியாலயம் - யாழ்ப்பாணம்

மக்கள் வங்கி யாழ்ப்பாணம் பிராந்திய தலைமைக் காரியாலயத்துக்கு உட்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள்/ சேவை மையங்களில் 31.05.2024 வரை அடகு வைக்கப்பட்டுள்ளதும் (ஒரு வருடத்திற்கு அடகு வைக்கப்பட்ட) 04.08.2025 திகதி வரை மீட்டெடுக்கப்படாத/ புதுப்பிக்கப்படாததுமான நகைகள் கீழ்க்காட்டப்பட்டுள்ள திகதிகள் மற்றும் இடத்தில் காலை 8.30 மணிக்கு தொடங்கி ஏலத்தில் விற்கப்படும்.

**ஏல விற்பனை நிகழும் தினங்கள் - 05.08.2025 மற்றும் 06.08.2025**

| ஏல விற்பனை நிகழும் இடம் | யாழ் ஸ்ரான்லி வீதிக் கிளை |
|---|---|
| கிளைகள் | யாழ்/ஸ்ரான்லி வீதி, தெல்லிப்பளை, யாழ்/பிரதான வீதி, ஊர்காவற்றுறை, நெல்லியடி, அச்சுவேலி, சங்கானை, சுன்னாகம், சாவகச்சேரி, வல்வெட்டித்துறை, யாழ் /பல்கலைக்கழகம், யாழ் /கன்னாதிட்டி, பருத்தித்துறை, கொடிகாமம் |
| சேவை நிலையங்கள் | மானிப்பாய், கொக்குவில் (நாவலர் வீதி), மல்லாகம், காங்கேசன்துறை, உரும்பிராய், புத்தூர், பண்டத்தரிப்பு, கோப்பாய், அளவெட்டி, கைதடி, உடுப்பிட்டி, திருநெல்வேலி, கல்வியங்காடு, இணுவில், புலோலி |

இந்த ஏலங்களை மறு அறிவிப்பு இன்றி இரத்துச் செய்யவும், ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்றவும், ஒன்றிணைத்துச் செயல்பட அல்லது இச்செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

பிராந்திய முகாமையாளர், பிராந்திய தலைமைக் காரியாலயம், கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல: 021-222 2601 : 021-222 2602

www.peoplesbank.lk

PEOPLE'S BANK
Pride of the Nation



## INVITATION FOR BIDS
## MANTHAI EAST PRADESHIYA SABHA - PANDIYANKULAM

1. The **Chairman, Divisional Procurement Committee On behalf of Chairman Manthai East Pradeshiya Sabha, Pandiyankulam, Naddankandal** invites sealed bids from eligible and qualified bidders for the works described in the table below. All the relevant details are described in the same table.
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB)** but limited to the bidders who registered under Northern Province.
3. Qualification requirements are indicated in section 4 of the Procurement Document. Additional details are provided in the Section 5 of the Procurement Document.
4. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the bidding documents at the same place on any working days from during the document issuing period mentioned in table below between 09:00 hrs and 15:00 hrs.

| | | Document Issuing / Purchasing Period | | | | | | | From 16.07.2025 until 29.07.2025 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | Pre-Bid Conference | | | | | | | At 10.30 A.M on 22.07.2025 | |
| | | Closing and Opening of Bids | | | | | | | At 10.30 A.M on 30.07.2025 | |
| S/No | Bid ID | Description of Work | Source of Fund | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Required CIDA Grade & Speciality | Non-Refundable Fee (Rs.) | Bid Validity Period up to | Required Bid Security | |
| | | | | | | | | | Amount (Rs.) | Validity Period |
| 01 | PSDG/NP/MU/MEPS/2025/LAR/02 | Renovation of Culvert in Kuththupalam Road | PSDG Fund | 5.50 | 63 | C8 or above (Highway) | 2,000.00 | 30-Sep 2025 | 82,500.00 | 28-Oct-2025 |

5. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Chairman, Manthai East Pradeshiya Sabha, Pandiyankulam, Naddankandal (T.P:021 228 4434, e.mail: manthaieastps@ yahoo.com) from 9:00 hrs to 15:00 hrs.** during the period stated in table above upon payment of non-refundable fees as mentioned in the table. The method of payment will be by cash.
6. Bids (Original & Duplicate) S/No from 01 to 04 must be delivered to the **Chairman, Divisional Procurement Committee, Manthai East Pradeshiya Sabha, Pandiyankulam, Naddankandal and Bids (Original & Duplicate) S/No from 05 to 07** must be delivered to the **Chairman, Divisional Procurement Committee, Manthai East Pradeshiya Sabha, Pandiyankulam, Naddankandal on or before 10.30 P.M as stated in table above.** Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend at **Manthai East Pradeshiya Sabha, Pandiyankulam, Naddankandal.**
7. Pre-Bid Conference will be held at Conference Hall, **Manthai East Pradeshiya Sabha, Pandiyankulam, Naddankandal** commencing at 10.30 AM as stated in table above.
8. All Bids must be accompanied by either Bid security as per the information given in the Tables.

Chairman
Divisional Procurement Committee,
Manthai East Pradeshiya Sabha,
Pandiyankulam,
Naddankandal.

16.07.2025

(CR/4510) J-1


# மலேசியாவில் கைதான குற்றவாளிகளை அழைத்துவர ஏற்பாடு

கொழும்பு, ஜூலை 16


மலேசியப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட 26 இலங்கைக் குற்றவாளிகளை உடனடியாக நாட்டுக்கு அழைத்துவரத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருவதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. இந்தக் குற்றவாளிகளை விசாரிக்கவும் அவர்களை நாடு கடத்துவது குறித்து விவாதிக்கவும் ஒரு சிறப்புப் பொலிஸ் குழு மலேசியாவுக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)


## மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில்
அழகாக மாபிள் பதித்துத் தரப்படும்.
ஒரு சதுர அடி - 75 ரூபா
நிலம் இழுத்துப் பதிக்க - 100 ரூபா
077 334 1281


## மரண அறிவித்தல்

தோற்றம் 27 . SEP . 1939



மறைவு 12 . Jul . 2025

### திரு. ஆசை தியாகராஜா

முன்னாள் பொறியியலாளர் RVDB, Srilanka - Cenent Corporation, Srilanka - Fisheries Corporation

மலேசியா **Ipoh** வைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதி, தெல்லிப்பழை, கொழும்பு ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட ஆசை தியாகராஜா அவர்கள் 12/07/2025 சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னார், காலஞ்சென்றவர்களான ஆசை தங்கச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சிவதேவி அவர்களின் அன்புக் கணவரும், இராமிலன், சுகன்யா ஆகியோரின் அன்புத் தந்தையும்,சத்தியபவானி, கதிர்வாசன் ஆகியோரின் அன்பு மாமனாரும்,சோனாக்ஷி, பிரவீணா, பிரவீன் ஆகியோரின் அன்புப் பேரனும்,காலஞ்சென்றவர்களான ஆசை குமாரசுவாமி, ஆசை குருகுலசிகாமணி, லீலாவதி மகாலிங்கம், அரியரத்தினம், குமாரச்சந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.அன்னாரின் பூதவுடல் இன்று (16-07-2025) புதன்கிழமை மு.ப 08:00மணியளவில் **Mahinda Florist, 591 Galle Rd, Dehiwala-Mount Lavinia** இல் பார்வைக்கு வைக்கப்பட்டு அதனைத் தொடர்ந்து பி.ப 03:00 மணியளவில் இறுதிக்கிரியை நடைபெற்று பின்னர் கல்கிசை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்

தகவல் : குடும்பத்தினர்

தொடர்புகளுக்கு :
இராமிலன் – மகன் +94703246208
சுகன்யா – மகள் +447830945943
கதிர்வாசன் – மருமகன் +447963024562

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பெண்கள் மற்றும் சிறுவர் சேவை அலுவலர்களுடன் கலந்துரையாடல்

பெண்கள் மற்றும் சிறுவர்கள் தொடர்பாக கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும், அரச உத்தியோகத்தர்களுக்குமான கலந்துரையாடல் பிரதிப்பொலிஸ்மா அதிபர் ஜே.ஏ.சந்திரசேன தலைமையில் கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக செயலர் நளாயினி இன்பராஜ், மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் சிசிர மெத்தர தந்திரி, உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் சமரக்கோன், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தில் பெண்கள் மற்றும் சிறுவர்கள் தொடர்பாகக் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள், சிறுவர் மற்றும் பெண்கள் தொடர்பாக மாவட்டச் செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-25, 113)

# வடக்குக்குக் கைகொடுப்பதற்கு கனடா அரசு முன்வரவேண்டும்

### கனேடியத் தூதுவரிடம் ஆளுநர் எடுத்துரைப்பு



**யாழ்ப்பாணம், ஜூலை 16**

**போர் நிறைவுற்று பல வருடங்கள் கடந்தபோதிலும் வடக்கு மக்கள் இன்னமும் பாதிப்பை எதிர்கொள்ளுகின்றனர். எனவே வடக்கின் வளர்ச்சிக்கு கனேடிய அரசாங்கம் உதவிகளை வழங்க வேண்டும் என்று கனேடியத் தூதுவரிடம் வடமாகாண ஆளுநர் சுட்டிக்காட்டியுள்ளார்.**

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனுக்கும், இலங்கைக்கான கனேடியத் தூதுவர் எரிக் வோல்ஷுக்கும் இடையிலான சந்திப்பு ஆளுநர் செயலகத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது.

இதன்போது வடக்கு மாகாணத்தில் குறிப்பாக வன்னிப் பிராந்தியத்தில் காணி தொடர்பான பிணக்குகள் அதிகளவில் உள்ளமையை சுட்டிக்காட்டிய ஆளுநர், போர் காரணமாக ஆவணங்கள் அழிவடைந்தமை இதற்குப் பிரதான காரணமாக உள்ளதாகத் தெரிவித்தார். வனவளத் திணைக்களம் மற்றும் வன உயிரிகள் திணைக்களம் என்பன கடந்த காலங்களில் இங்குள்ள அதிகாரிகளுக்குத் தெரியாமல் கூகுள் வரைபடத்தின் உதவியுடன் காணிகளை வர்த்தமானியில் பிரசுரித்தமையால் எழுந்துள்ள சவால்களையும் ஆளுநர் எடுத்துக்கூறினார்.

இந்தத் திணைக்களங்களால் வடக்கு மாகாணம் மாத்திரமல்ல ஏனைய பிரதேசங்களிலும் பாதிப்புகள் உள்ளதாக தாம் அறிந்திருப்பதாக கனேடியத் தூதுவர் பதிலளித்தார். 2019ஆம் ஆண்டு காலப்பகுதியில் வடக்கு மாகாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட வீட்டுத்திட்டங்கள் இடைநடுவில் உள்ளமையால் மக்கள் இன்னமும் பாதிப்பை எதிர்கொள்கின்றனர். அந்த மக்கள் அதனை முழுமைப்படுத்துவதற்கு உதவிகள் தேவை. அதேபோல பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் உற்பத்தி முயற்சிகளில் ஈடுபடுகின்றன. அவர்கள் தமது உற்பத்திகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுக்கவேண்டும்.

வடக்கு மாகாணத்தில் வேலைவாய்ப்பு சவாலாக உள்ளது. இதற்குத் தீர்வைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கிலும் விவசாய மற்றும் கடல் உற்பத்திப் பொருள்களை பெறுமதிசேர் உற்பத்திப்பொருள்களாக மாற்றும் தொழிற்சாலைகளை இங்கு அமைப்பதற்கு முதலிடுவதற்கு கனேடியவாழ் மக்களை ஊக்குவிக்கவேண்டும் என்றும் ஆளுநர் கோரிக்கை முன்வைத்தார்.

வடக்கில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ள முதலீட்டு வலயங்களின் முன்னேற்றம், யாழ்ப்பாணம் சர்வதேச விமானநிலைய விரிவாக்கம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பிலும் கனேடியத் தூதுவர் கேட்டறிந்துகொண்டார். (ச-35)


## நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
## ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
## பதவி வெற்றிடம்.

1. பதவி - பொதுமுகாமையாளர் - **101/07**

சம்பள அளவுத் திட்டம் - 36125 - 475 x 10-500 x 10 - 45875
433500 -5700 x 10-6000 x 10-550500

**அங்கீகரிக்கப்பட்ட தகமைகள்**

அ. கூட்டுறவு ஊழியர் 08வது சம்பளத்திட்டப் பதவியில் ஆகக் குறைந்தது 02 ஆண்டுகால அனுபவம்/
கூட்டுறவு ஊழியர் 09வது சம்பளத்திட்டப் பதவியில் முகாமை நிலை / மேற்பார்வை நிலைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டுகால அனுபவம்.

அல்லது

ஆ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டம் / அதற்குச் சமனான தகைமை.
இத்தகைமையானது கணக்கியல் / வியாபாரப் புள்ளி விபரவியல் / வியாபாரக் கற்கைகள் தொடர்பான பாடங்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும். /
இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியின் கணக்கியல் / முகாமைத்துவம் / வர்த்தகம் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா சித்தி

அல்லது

இ. கூட்டுறவு ஊழியர் உயர்தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் / அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனமொன்றில் முகாமை நிலைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 05 ஆண்டு கால அனுபவம் /
க.பொ.த உயர் தரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் / அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை நிலைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 06 ஆண்டு கால அனுபவம்.

**ஏனைய விபரங்கள்**

01. மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கான சம்பள திட்டங்கள் அனைத்தும் கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவின் 02/2025 சுற்று நிரூபத்திற்கு அமைவானது.
02. வயதெல்லை 18 - 45 (சங்கப் பணியாளர்களுக்கு இவ் வயதெல்லை பொருந்தற்றது.)
03. இப் பதவிக்குரிய அடிப்படை சம்பளத்தை விட கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சுற்று நிரூபத்திற்கு அமைய இதர படிகளும் காலத்திற்கு காலம் அங்கீகரிக்கப்படும் கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.
04. குறித்த பதவிக்கு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி சங்கத்தினால் கோரப்படும் பிணையினை செலுத்துதல் வேண்டும்.
05. ஏற்கனவே கூட்டுறவுச் சங்கம் ஒன்றில் கடமையாற்றும் ஊழியர் அச் சங்கத்தின் ஊடாகவே விண்ணப்பித்தல் வேண்டும்.
06. தகமையற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

மேற்படி பதவிகளுக்கான விண்ணப்ப படிவத்தினை சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் ரூபா 100.00 இனை செலுத்தி பெற்று பூரணப்படுத்தப்பட்டு சான்றிதழ்களின் பிரதிகளும் இணைத்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர், பதவிக்குரிய சம்பள குறியீட்டு இலக்கம் என்பவற்றை குறிப்பிட்டு "தலைவர், நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், ஆடியபாதம் வீதி திருநெல்வேலி எனும் முகவரிக்கு 31.07.2025ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

தலைவர்
நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
தொ.இல : **0212222143**



## 31 ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 28 . 04 . 1944



மறைவு 16 . 06 . 2025

## அமரர் உஷாதேவி செல்வநாதன்

**முப்பத்தொரு நாட்கள் உருண்டோடி மறைந்தாலும்,**
**எம் விழிகளை விட்டு உங்கள் நினைவுகள் அகலவில்லை.**
**உங்கள் நினைவுகள் எம் இதயத்தில் என்றும் வாழும்,**
**ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகிறோம்.**

எமது குடும்பத் தலைவியின் மறைவுச் செய்தி அறிந்து நேரில் வந்தும், தொலைபேசியூடாகவும், முகநூல், மின்னஞ்சல் மூலமாகவும் எமக்கு அனுதாபம் தெரிவித்து ஆறுதல் கூறியவர்களுக்கும், மலர் வளையங்கள், மலர் மாலை சாத்தியவர்களுக்கும், மற்றும் அனைத்து வழிகளிலும் ஆறுதலாகவும், உதவியாகவும் இருந்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குடும்பத்தினர்

(CS 2539) V-1

(CS-58854) E


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு. பிரான் தனது AIA உடனான தொழில் வாழ்க்கையின் 15 வது ஆண்டு நிறைவை தனது வாடிக்கையாளர்களுடன் கொண்டாடினார்.









ஆயுட்காப்புறுதி துறையில் AIA பல்தேசிய நிறுவனத்தை பிரதிநிதித்துவப்படுத்தி Court of the table மற்றும்Top of the table உள்ளடங்கலாக MDRT - Million Dollar Round Table (USA) அங்கத்துவத்தை தொடர்ச்சியாக 10 வருடங்கள் வெற்றி கொண்டு MDRT சர்வதேச அமைப்பின் ஆயுட்கால அங்கத்தவராக திகழ்வதோடு IQA- International Quality Award, IAP-International Award for Productivity போன்றவற்றையும் தொடர்ச்சியாக வென்று வருகிறார் இவர் கடந்த 11.05.2025 அன்று தனது தொழில் வாழ்க்கையின் 15 வது ஆண்டு நிறைவை தனது வாடிக்கையாளர்களுடன் கிளிநொச்சியில் வெகு விமர்சையாக கொண்டாடினார்.

அவர் உள்நாட்டிலும் வெளிநாட்டிலுமாக 600 இற்கு அண்மித்த வாடிக்கையாளர்களை தன்னகத்தே கொண்டுள்ளதுடன் மேற்படி நிகழ்வில் 200 இற்கு மேற்பட்ட வாடிக்கை யாளர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது அவர்களுக்கு பல்வேறு வகைகளின் அடிப்படையில் கௌரவமும் பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டது. மேலும் வருமான வரி தொடர்பான கருத்தரங்கும், இராப்போசனமும் இடம்பெற்றது.









வெளிநாட்டிலுள்ள

## இலங்கையர்களுக்கு ஒன்லைன் கடவுச்சீட்டு



கொழும்பு, ஜூலை 16

வெளிநாடுகளில் அமைந்துள்ள இலங்கைத் தூதுப்பணி குழுக்கள்/அலுவலகங்கள் மூலம் இணையவழி மூலம் கடவுச்சீட்டுகளை விண்ணப்பிப்பதற்கான கருத்திட்டத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இந்தக் கருத்திட்டத்தை இவ்வாண்டு தொடக்கம் நடைமுறைப்படுத்துவதற்காக வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர், பொதுப் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஆகியோர் இணைந்து சமர்ப்பித்த ஒருங்கிணைந்த யோசனைக்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ச-இ)

## புல்வெட்டும் இயந்திரங்கள் மாநகரசபைக்குக் கையளிப்பு

கொழும்பு, ஜூலை 16

யாழ்ப்பாணம் மாநகரசபையின் பிரதி முதல்வர் இம்மானுவல் தயாளன் யாழ்ப்பாணம் கேற்வே லயன்ஸ் கழகத்திடம் முன்வைத்த கோரிக்கைக்கு அமைவாக இரண்டு புல் வெட்டும் இயந்திரங்கள் அண்மையில் யாழ்ப்பாணம் மாநகரசபைக்கு கையளிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் மாநகரசபைக்கு வருகைதந்த லயன்ஸ் கழகத்தினர் யாழ்ப்பாணம் மாநகரசபைப் பிரதி முதல்வர் இ.தயாளன், மாநகர ஆணையாளர் ச.கிருஸ்ணேந்திரன் மற்றும் மாநகரசபை உறுப்பினர்கள் அடங்கிய குழுவினரிடம் புல் வெட்டும் இயந்திரங்களைக் கையளித்தனர். (ச)



## வெள்ளை ஈ கட்டுப்பாட்டுத் திட்டம் இடங்களும், திகதிகளும் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 16

வெள்ளை ஈ தாக்கத்தைக் கட்டுப்படுத்துவமற்காக, தென்னை பயிர்ச் செய்கை சபையால் முன்னெடுக்கப்படும் செயற்றிட்டங்கள் எங்கு, எப்போது முன்னெடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி பிரதேசசெயலர் பிரிவில் கடந்த மூன்று நாள்களாக இடம்பெற்று வந்த இந்தச் செயற்றிட்டம் இன்றுடன் முடிவுக்கு வருகின்றது. இதன்படி, நாளை மற்றும் நாளைமறுதினம் கோப்பாயில் முன்னெடுக்கப்படவுள்ளது. உதவி தேவைப்படுபவர்கள் 0774409933 என்ற இலக்கத்துக்கு அழைப்பெடுக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் உடுவில் பிரதேச செயலர் பிரிவில் எதிர்வரும் 21ஆம், 22ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளதுடன், உடுவில் பிரதேசசெயலர் பிரிவில் உதவி தேவைப்படுபவர்கள் 0779074230 என்ற இலக்கத்துக்கு அழைப்பெடுக்க முடியும்.

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் எதிர்வரும் 23ஆம், 24ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளதுடன், நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் உதவி தேவைப்படுபவர்கள் 0778222560 என்ற இலக்கத்துக்கு அழைப்பெடுக்க முடியும்.

அதுபோல், யாழ்ப்பாணம் பிரதேச செயலர் எதிர்வரும் 25ஆம் திகதியன்று இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் உதவி தேவைப்படுபவர்கள் 0771976959 என்ற இலக்கத்துக்கு அழைப்பெடுக்க முடியும்.

வெள்ளை ஈ கட்டுப்பாட்டுச் செயற்றிட்டத்தை மேற்கொள்வதில் ஆளணிப் பற்றாக்குறை காணப்படுகின்றது. பொது மக்கள் தன்னார்வலர்களாக உதவி செய்ய விரும்பினால், தென்னை பயிர்ச் செய்கை சபையின் உதவிப் பொது முகாமையாளர் ரி.வைகுந்தனைத் தொடர்பு கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ம)

## கனடாவுக்கு அனுப்புவதாக மோசடி தவறான முடிவெடுத்து ஒருவர் பலி

யாழ்ப்பாணம், ஜூலை 16

கனடாவுக்கு அனுப்புவதாகக் கூறி ஏமாற்றப்பட்ட நிலையில், பெருந்தொகை பணத்தை இழந்த குடும்பத்தலைவர் ஒருவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார்.

புங்குடுதீவு நான்காம் வட்டாரத்தைச் சேர்ந்த நபரே இவ்வாறு தவறான முடிவெடுத்து உயிரிழந்தவராவார். கனடாவுக்கு அனுப்புவதாகக் கூறியவை நம்பி, அண்ணளவாக 80 லட்சம் ரூபா பணத்தை வழங்கியிருந்த நிலையில், இரண்டரை வருடங்களாக அவர் தொடர்ச்சியாக ஏமாற்றப்பட்டு வந்துள்ளார்.

இதையடுத்தே நேற்றுத் தவறான முடிவெடுத்து அவர் உயிரிழந்துள்ளார். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-26)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதன் பொய்கை
16.07.2025
புதன்கிழமை

தவறவிட்ட வாய்ப்பபை விட அதிக மதிப்புடைய விஷயம் வேறு எதுவுமில்லை.

- ஜாக்சன் பிரவுன்

# ஜூலைக் கலவரம்




## இலங்கையின் வரலாற்றையே மாற்றி எழுதிய திருநெல்வேலி

■ ஊடகவியலாளர் எம்.ஐ.முபாறக்

**பற்றி எரிகிறது கொழும்பு பொரளையில் இருந்து ஆரம்பம்**

திருநெல்வேலி தபால்பெட்டிச் சந்தியில் கொல்லப்பட்ட 13 படையினரின் உடல்களும் இப்போது கொழும்பில். நாட்டில் ஒரே பரபரப்பு. இதைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்துவதற்குத் திட்டமிடுகிறார் ஜனாதிபதி.

தமிழர்களுக்கு எதிராக இனக்கலவரம் ஒன்றை உருவாக்குதல், அதை வைத்துப் பல கோணங்களில் அரசியல் இலாபமடைதல். இதுதான் ஜே.ஆரின் திட்டம். அதன் முதற்படிதான் உடல்களை பொரளைக் கனத்தையில் அடக்கம் செய்தல். அவர்களின் சொந்த ஊர்களுக்கு அனுப்புவதில்லை என முடிவெடுக்கப்பட்டுவிட்டது. அவ்வாறு செய்தால் மக்கள் குழம்புவார்கள். கொல்வதைவிடவும் கொடுமையானது உடல்களை உறவினர்களிடம் கொடுக்கமறுப்பது. அது மேலும் கோபத்தை ஏற்படுத்தும்.

உறவினர்கள், அயலவர்கள், ஊர்க்காரர்கள் எல்லோரும் ஆத்திரப்படுவார்கள். அந்தக் கோபத்தை அவர்கள் தமிழர்கள்மீதே காட்டுவார்கள். இனக்கலவரம் என்பது சிறிய தீக்குச்சியில் இருந்து வெளிப்படும் தீயைப் போன்றது. சிறிதாக வந்து பெரிதாக அழித்துவிடும். எங்கோ ஓரிடத்தில் தொடங்கும் தீ பல இடங்களை அழிக்கும். அப்படித்தான் இந்த ஜூலைக் கலவரமும். பொரளையில் அடக்கினால் ஊர்களில் கலவரம் வெடிக்கும். இது ஜே.ஆரின் கணக்கு. சரியான கணக்கு. இதற்கு உடன்படவில்லை பிரதமர் ஆர்.பிரேமதாஸ. உடல்களை உறவினர்களிடம் ஒப்படைக்க வேண்டும். இதுதான் பிரேமதாஸவின் நிலைப்பாடு. ஆனால், பிடிவாதமாக நிற்கிறார் ஜே.ஆர்.

ஜே.ஆரின் விருப்பமே வெல்கிறது. தோண்டப்படுகின்றன 14 குழிகள். ஏன் 14..? மரணித்தவர்கள் 13 தானே... உபாலி பெரேராவும் மரணமாம். காயமடைந்தவர் அவர். அவருக்கும் சேர்த்துத்தான் குழி. உபாலியின் வீட்டுக்குச் செல்கிறது தகவல். மருத்துவமனைக்கு விரைகின்றனர் அவர்கள். வந்துபார்த்தால் மகிழ்ச்சி. இறக்கவில்லை. உயிருடன்.

இப்போது எல்லோரது கவனமும் கனத்தை மீதுதான். படை எடுக்கிறார்கள் அங்கு இறுதிக்கிரியைக்காக. வழமைபோல்தான் வியாபாரம். பொரளை நடைபாதையில் தமிழர்களின் கடைகள்தான் அதிகம். நடக்கப்போவது எதுவும் அறியாநிலையில் அவர்கள் பாவம். பஸ்களுக்காகக் காத்துநிற்கும் கூட்டம் இன்னொரு புறம். இதைத்தவிர வேறு எந்த நிகழ்வுமே இல்லை. கொழும்பு முழுவதும் இதே நிலைதான். வெறிச்சோடிக் கிடக்கிறது கொழும்பு. நிரம்பி வழிகிறது கனத்தை. அசம்பாவிதம் எதுவும் நடந்துவிடக்கூடாது. பொலிஸார் கடும் அலேர்ட். அதற்கு ஏற்ப பாதுகாப்பு. கூடிய கவனம் செலுத்துகிறார் பொலிஸ் உயர் அதிகாரி கபூர். மறுபுறம் சடலங்களை எதிர்பார்த்தவாறு இராணுவம். மக்களும் அதே எதிர்பார்ப்புடன். ஆனால், வருவதாக இல்லை. தாமதம், இதனால் பதற்றம். இதுதான் சந்தர்ப்பம். கலவரத்தை ஏற்படுத்துவதற்கு, தமிழர்களின் சொத்துகளை அழிப்பதற்கு, அவர்களைக் கொல்வதற்கு. இதற்கென்றே தயாரான நிலையில் பேரினவாதிகள் அரசின் ஏற்பாட்டோடு இறங்குகிறார்கள் இப்போது வீதிக்கு. நடத்துகிறார்கள் வேட்டையை.

**மறுபக்கமும் ஒரு சலசலப்பு. அது என்ன ...???**

எதிர்க்கட்சி அரசியல்வாதிகளுக்கும் கபூரின் பொலிஸ் அணிக்கும் இடையில் வாக்குவாதம். அப்படியே இருக்கையில் இன்னுமொரு சம்பவம். அதுதான் கலவரத்தின் ஆரம்பம். பெரும் தீப் பிழம்பு. சற்றுத் தள்ளி. அது பொரலலச் சந்தியில். ஆம்...தீ வைக்கப்படுகின்றன கடைகள். அங்குள்ள தமிழர்களின் கடைகள். அவற்றுள் மூன்று தேங்காய் எண்ணெய்க் கடைகள். அங்கு ஒரு கட்டடம். ஆறு மாடிக் கட்டடம். அது ஒரு வர்த்தக நிலையம். அதுவும் தீக்கிரை. தீயின் சூட்டால் வெடித்துச்சிதறுகின்றன அதன் கண்ணாடிகள். முழுப் பொரளைச் சந்தியும் கரும்புகைக்குள். மருதானைப் பக்கம் பார்த்தால், அங்கும் அதேநிலைதான். வீதியில் நிற்க முடியவில்லை. கடும் சூடு. தாங்கமுடியா சூடு. சிதறி ஓடுகிறார்கள் மக்கள் நாலாபக்கமும், சூட்டில் இருந்து தப்பவதற்காக. இறுதிக்கிரியைக்காக வந்தவர்கள் அவர்கள். இதற்குள் திருடர்களும் கைவரிசை. கடைகளுக்குள் புகுந்து பொருள்களை அள்ளிச் செல்கிறார்கள். இப்படித்தான் ஆரம்பம் அந்த ஜூலைக் கலவரம். இங்கிருந்துதான் ஆரம்பம். பொரளையில் இருந்து... வடக்கு- கிழக்குத் தவிர நாட்டின் எல்லா இடங்களுக்கும் பரவுகிறது இந்தக் கலவரம். அழிக்கப்படுகின்றன தமிழர்களின் வர்த்தக நிலையங்கள், வீடுகள், வாகனங்கள், உயிர்கள் என எல்லாம்.

தொடர்ச்சியாக ஏழு நாள்கள் இதே நிலைதான். அரசு கைகட்டிப் பார்த்துக்கொண்டு நிற்கிறது. ஏனென்றால் அவர்கள்தான் சூத்திரதாரிகள். அமைச்சர் சிறில் மத்திய தலைமையில் அன்று இயங்கியது தொழிற்சங்கம் ஒன்று. ஐக்கிய தேசியக் கட்சியினுடையது. நாடு பூராகவும் அதன் உறுப்பினர்கள். அவர்களின் கைகளில் தமிழர்களின் வாக்காளர் பட்டியல்.

அதை வைத்துக்கொண்டுதான் இலகுவாக முடித்தார்கள் தமிழர்களின் கதையை. அழித்தார்கள், சூறையாடினார்கள் அவர்களின் சொத்துகளை...,


எப்படிப்பட்ட கொடுமை எப்படிப்பட்ட அநியாயம். இன்னும் என்னவெல்லாம் நடந்தது...???

**தொடரும்...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமொழிப் பயன்பாடு ஈழத்தில் மிக அதிகம்!



## பேராசிரியர் வெற்றிச்செல்வன் வெளிப்படை

கீழத்தஞ்சை என்று அழைக்கப்படுகிற நாகப்பட்டினம் மாவட்டம், வேளாங்கண்ணிக்கு அருகில் உள்ள, பெரியதும்பூர் என்ற சிறிய கிராமத்தில் பிறந்தவர்தான் தமிழ்ப்பேராசிரியர் தெ.வெற்றிச்செல்வன். தீவிர மொழி உணர்வாளர். சமூகப்போராளி. பலராலும் மதிக்கப்படக்கூடிய ஓர் ஆளுமை. அண்மையில் இலங்கைக்கு வந்த அவருடனான நேர்காணல் இது...

நேர்கண்டவர் : வெற்றிவேல் சக்திவேல்

**கே: உங்களுடைய கல்விப் பின்புலம் எவ்வாறு அமைந்தது?**

ப: என்னுடைய தொடக்கக்கல்வி முதல் மேல்நிலைக்கல்வி வரையும் பிறகு ஆசிரியர் பயிற்சியும்கூட அரசு கல்வி நிறுவனங்களிலேயே இடம்பெற்றது. பட்டப்படிப்புகளை சென்னைப் பல்கலைக்கழகத்திலும், ஈழத்தமிழர் புகலிட வாழ்வியல் குறித்த ஆய்வு சார்ந்து முனைவர் பட்டத்தைத் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித்துறையிலும் நிறைவுசெய்து, அதே துறையில் 2007ஆம் ஆண்டுமுதல் கற்கை மற்றும் ஆய்வு நெறியாளராகப் பணியாற்றிவருகிறேன்.

**கே: நீங்கள் இலக்கியத்துறையில் பயணிக்க உந்துசக்தியாக விளங்கிய விடயங்கள் தொடர்பில்...?**

ப: வீட்டில் இருந்த அரிய நூல்திரட்டுகளை என் தந்தையார் வழியாகப் பெற்றிருந்ததால் பள்ளிக் கல்விக் காலத்திலேயே இலக்கிய வாசிப்புத் தொடங்கிவிட்டது. அதைத்தொடர்ந்து நாகப்பட்டினம் மைய நூலகம், பிரதாபராமபுரம் கிளை நூலகம் என, நூலக வாசித்தலில் வாசிப்பு விரிவடைந்து சென்றுகொண்டிருந்தது. அதிலும் குறிப்பாக பிரதாபராமபுரம் கிளைநூலகத்தில் இருந்து ஈழத்து நூல்கள் பல வாசிக்கக் கிடைத்தது எனக்கு நல்வாய்ப்பாக இருந்தது. பின்னாளில் எனது முனைவர் பட்ட ஆய்வுக்கு, ஈழத்தமிழ் இலக்கியங்களை ஆய்கிற அளவுக்கு எனக்கு ஈழத்தமிழ் இலக்கிய வாசிப்பின்மீதான பிடிப்பும் தேடலும் அமைந்தன.

பிறகு, பேராசிரியர் அரசமுருகு பாண்டியன் நூலகத்தில் அரியநூல்களை வாசிப்பதற்கான வாய்ப்புக் கிடைத்தது. அவர் ஒரு சிறந்த படைப்பாளியாக முன்னோடியாக இருந்த நிலை, நான் படைப்பாளியாக வழிகாட்டியது. 21-22 ஆம் வயதுகளில் எழுதத் தொடங்கி, இன்றைய நிலையில் 26 நூல்களை எழுதியுள்ளதோடு 'பெண்ணென்றால்' என்கிற நான்கு நிமிட ஆவணப்படம், நிலமும் மனித மனமும் ஒரேசமயத்தில் எப்படி தரிசாகிக்கொண்டிருக்கின்றன என்பதான 'தரிசு' குறும்படம், கால்டுவெல், சீகன்பால்கு, ரேனியஸ், அன்ரிக் அடிகளார், வீரமாமுனிவர் போன்ற அயல்நாட்டு அருட்பணியாளர்கள் தமிழுக்கு ஆற்றிய தொண்டு குறித்த 'மறைத்தமிழ்' என்கிற ஓர் ஆவணப்படம் இப்படியான மாற்றுத்திரை ஆக்கங்களுக்குப் பங்களித்துவந்திருக்கிறேன்.



**கே: உங்கள் படைப்புகள், ஆக்கங்கள் வெளிவந்த ஏடுகள் இதழ்கள் தொடர்பில்...?**

ப: பல்வேறு இதழ்களில் எழுதிவந்திருக்கிறேன். பூஞ்சோலை, சௌந்தரசுகன், மன்னுயிர் என்கிற சிற்றிதழ்கள், ஆனந்த விகடன், புதியபார்வை, போன்ற இதழ்கள் இவற்றில் எழுதிவந்ததோடு, தினமணி, தமிழ் இந்து போன்ற நாளேடுகளில் நடுப்பக்கத்தில் என்னுடைய கட்டுரைகள் வெளியாகி இருக்கின்றன. தொடர்ந்து கணையாழி, புதுவிசை, படித்துறை, அரிமா நோக்கு, ஷாண்லாக்ஸ், சர்வதேசத்தமிழ், அரண், இனம், தமிழ்க்கலை, உங்கள் நூலகம், புத்தகம்பேசுது, திராவிட முழக்கம், பேசும் புதியசக்தி போன்ற பற்பல இதழ்களிலும் கட்டுரைகள் வெளிவந்துள்ளன. இலங்கையிலிருந்து வெளிவரக்கூடிய ஞானம் என்ற இதழிலும் கனடாவிலிருந்து வெளிவரக்கூடிய வைகறை என்ற இதழிலும் கட்டுரைகள் வெளிவந்திருக்கின்றன. இணைய இதழ்களான ஆறாம் திணை, பன்னாட்டுத் தமிழியல் போன்ற இதழ்களில் ஆக்கங்கள் வெளிவந்துள்ளன. சாகித்திய அக்கெடமி தொகுத்த புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு உள்ளிட்ட பல்வேறு தொகுப்பு நூல்களில் என்னுடைய 70க்கும் மேற்பட்ட கட்டுரைகள் வெளியாகியுள்ளன.

**கே: உங்களுக்குக் கிடைத்த விருதுகள் அல்லது அங்கீகாரம் தொடர்பில்...**

ப: 2000ஆம் ஆண்டில் எட்டயபுரம் பாரதி விழாவில் 'தைரியமாகச் சொல்' எனும் எனது நூல் சிறந்த சிறுகதை நூலுக்கான 'நியூசெஞ்சுரி' புத்தகநிறுவன விருதைப் பெற்றுள்ளது. சிறந்த ஆவணப்பட இயக்குநர் என்கிற விருதை நான் இயக்கிய 'பெண்ணென்றால்' ஆவணப்படம் பெற்றுள்ளது. மலேசியப் பேராசிரியர் கிருஷ்ணன் மணியம் விருதினை நான் ஆய்ந்து எழுதிய 'புலம்பெயர்தமிழும் புகலிடத்தமிழும்' நூல் பெற்றுள்ளது. 'ஆசிரியச்செம்மல்' என்கிற விருதினை தமிழ்நாடு கல்வி ஆராய்ச்சி வளர்ச்சி நிறுவனமும், 'பைந்தமிழ்ச்சிற்பி' என்ற விருதினை இலட்சுமி சந்திரசேகரன் அறக்கட்டளையும் வழங்கியிருக்கின்றன.

**கே: நவீன தமிழாய்வில் மார்க்சிய அணுகுமுறை பற்றிய பார்வைகளைப் பகிர்ந்துகொள்ளுங்கள்....?**

ப: மார்க்சியம் மிகப்பெரிய அரசியல் பொருளாதாரப் பண்பாட்டுத் தளங்களில் விரிந்த பார்வைகளைக் கொண்ட ஒரு கோட்பாடு. எல்லாவிதமான ஒடுக்குமுறைகளிலிருந்தும் உலகை விடுவிக்கும் விடுதலைப்பெருவெளி கொண்டது. இந்தச் சித்தாந்த அடிப்படையில் அணுகுவதும் மார்க்சிய அழகியல் அடிப்படையில் படைப்பாக்கங்களை ஆய்வதும் ஒரு பாய்ச்சலை உண்டாக்கியிருக்கிறது என்று நான் பார்க்கிறேன். மார்க்சிய ஆய்வின் காரணமாக, முன்னர் வெளிச்சப்படுத்தப்படாத பகுதிகள் பலவும் இப்போது துலக்கம் பெறுவதும் வெளிச்சம் பெறுவதும் நிகழ்ந்தேறியிருக்கின்றன.

**கே: ஈழத்திலும் தமிழகத்திலும் கற்கைநெறி சார்ந்த செயன்மைகள் குறித்து உங்களுடைய கருத்தாக்கங்கள் எவை...?**

ப: ஈழத்தமிழ்ப் புலமைமரபு எப்போதுமே தனித்துவமானது. அதன்மீது நாங்கள் மிகவும் மதிப்பு வைத்திருக்கிறோம். அதேவேளை ஈழத்தில் அளவுகடந்த வடமொழிப் பயன்பாடு இருப்பதை நான் நேரடியான களஆய்வுகளிலும் ஈழத்தமிழ் நூல்களின் வழியாகவும் பார்க்கிறேன். தமிழ்நாட்டில் தனித் தமிழ் இயக்கம் உருவாக்கி வளர்த்தெடுக்கப்பட்டதில் ஓரளவு நல்ல தமிழ் சார்ந்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டவற்றைப் போல ஈழத்திலும் செய்யப்படவேண்டும். அதற்கான என்னுடைய பங்களிப்பையும் நான் செய்ய இருக்கிறேன். இது ஒரு மிக முக்கியமான பணி என்று நான் கருதுகிறேன்.

**கே: புதிய துறைசார் முகிழ்நிலைப் படைப்பாளிகளுக்குத் தாங்கள் கூற விரும்புவது என்ன?**


ப: தொடர்ந்து வாசிப்பின்மீதான தேடலை, கூர்மையை, வடிகட்டி வாசிப்பதன்மீதான பார்வைகளை, மறுவாசிப்புச் செயற்பாடுகளை நாம் மேலும் மேலும் துலக்கப்படுத்திக்கொள்ள வேண்டும் என்று நினைக்கிறேன். தனித்துநின்று ஆலோசனை சொல்வது என்பதைவிட என்னையும் உள்ளடக்கிக்கொண்டு, ஈழம், சிங்கப்பூர், மலேசியா, தமிழ்நாடு என்று எல்லாத் தளங்களிலும் தமிழ்ப்படைப்பாளிகளாக இயங்கிவருபவர்களுக்கு ஒருங்கிணைந்த தமிழாய்வுப் பார்வையும் தமிழ்ப்படைப்பின் மீதான கண்ணோட்டமும் செழுமைப்படவேண்டும். அவை புதிய உலகின் கதவுகளைத் தட்டவேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரி.பி.ஹன்ட் ஓவியக் கூடத்துக்கு

## வயது 7





சாவகச்சேரி தேவாலய வீதியில் அமைந்துள்ள ரி.பி. ஹன்ட் ஓவியக் கூடத்தின் ஏழாம் ஆண்டு நிறைவுவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை நிறுவன ஸ்தாபகர் இவான்சலின் யோகமணி அழகரட்ணம் தலைமையில் சிறப்புற இடம்பெற்றது.

நிகழ்வில் தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் கிறிஸ்தோபர் கமல ராஜன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஓவியத்துறை விரிவுரையாளர் ஆனந்த காங்கேயன், கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முதல்வர் செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன், யாழ்.சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி அதிபர் ஐ.தேவஈஸ்வரன், பிறிட்ஜ் அக்கடமி இயக்குநர் து.ஸ்ரீசுடரோன், தென்னிந்தியத் திருச்சபையின் போதகர் செ.துரைரட்ணம் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.

வடக்கு, கிழக்குப் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட ஓவியப் போட்டியில் சிறந்த ஓவியங்களாகத் தெரிவுசெய்யப்பட்ட ஓவியங்கள் இந்த ஓவியக் கூடத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. ஓவியப் போட்டியில் வெற்றியீட்டியோருக்குப் பெறுமதியான பரிசில்களும் வழங்கப்பட்டன.



# ஆடி பிறந்தனளே

வாடி வதங்கி, உலகம் வாழ
வழங்குநர் மேனியது தினம்
ஆடி அசைந்து உழைப்பதைப் போலே
ஆடி பிறந்தனளே

கோடி இருக்க தேடித்தவிக்கும்
கூட்டம் பார்த்திடவே புகழ்
சூடி உழைக்கும் கைகள் துதிக்க
ஆடி பிறந்தனளே


மாடிமனைகள் உழைப்போர் தம்மை
மாடாய்ப்பார்த்து வரும் இருள்
கூடி இருக்கும் பார்வை சிறக்க
ஆடி பிறந்தனளே

பாடி வணங்கும் பணிகள் புரியும்
பாவலர் வாழ்த்திடவே நலம்
நாடி உழைக்கும் நல்லோர் போற்ற
ஆடி பிறந்தனளே

கூடி மகிழ்ந்து மதுவில் வீழ்வோர்
கொற்றம் அடக்கிடவே கடல்
ஓடி உழைக்கும் வல்லோர் மகிழ
ஆடி பிறந்தனளே

தேடி இருக்கும் தேட்டம் மேலும்
திரளாய்ப்பெருக்கிடவே வீணே
ஓடி அலையும் உன்மத்தம் போக்க
ஆடி பிறந்தனளே

ஆனையூர்க்கவிராயர்






# நூல் நிலையம்

நூல் நிலையம் இல்லாத வீடு
உயிர் இல்லாத உடம்பாகும்
அறிவைப் பெருக்கவேண்டும்
நற்பண்பை வளர்க்கவேண்டும்
புத்தியைத் தீட்டவேண்டும்
பல புதுமைகள் செய்திடவேண்டும்
அத்தனையும்
பெற்றிடலாம் வாழ்வில்
நல்ல நூல்கள் நம்மிடமிருந்தால்


மானிடனே! நீ
கண்ட நூல்களையும்
படிக்காதே!
கண்ட கதைகளையும்
கேட்காதே!
நல்லுணர்வும் எண்ணமும்
நற்கருத்தும் கொண்ட
நல்ல நூல்களைக் கற்றிடவே
வேண்டும்!

நூல் நிலையம்
கலைக்களஞ்சியம்
நல்லறிவும் திறனும்
சேமிக்கும் கோட்டை
பழமையும் புதுமையும்
மிளிர்கின்ற காட்சியறை!
மனித சமுதாயத்தின்
நாட்குறிப்பேடு
தேங்கியிருக்கும் மண்டபம்!

மானிட அறிவைத்
தேடுகின்ற பெருங்கடல் அது!
நீந்திக் கடந்தவன்
அறிஞர் ஆகிறான்!
உள்ளே நுழைந்தவன்
வெளிவர மறுக்கும்
அறிவுக்கூடம் அது!

உலகில் நூல் நிலையங்கள்
இல்லாத நாடுகள் இல்லை
ஒவ்வொரு நாட்டினதும்
அறிவு வளர்ச்சியினையும்
அறிஞர் பெருக்கத்தையும்
பறைசாற்றும் காட்சியறை
எதிர்காலச் சந்ததியினருக்கு
உரிய அரிய பொக்கிஷம்!


திருமதி தவமணிதேவி
கனேசலிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சத்தியா: காலத்தால் அழியாக் குரலோன்

■ ஜெகதீஸ்வரன் பிரசாந்



தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் புலிகளின் குரல் வானொலியின் பிரபல அறிவிப்பாளராக செயற்பட்ட சத்தியா (சிவசுப்பிரமணியம் ஞானகரன்) மாரடைப்புக் காரணமாக வட்டக்கச்சியில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை காலமானார்.

1990 ஆம் ஆண்டில் புலிகளின் வானொலி தொடங்கி முதலாவது செய்தி ஒலிபரப்பாகிய பொழுது "புலிகளின்குரல் செய்திகள் வாசிப்பவர் சத்தியா" என்ற குரல் ஈழத்தமிழர்கள் வீடெங்கும் ஒலித்தது. புலிகளின்குரல் வானொலியில் செய்தி ஆசிரியராகவும் செய்தி வாசிப்பாளராகவும் 2003 ஆம் ஆண்டு வரையில் செயற்பட்டிருந்தார். அவருடைய செய்தி வாசிப்புப் பாணியை வைத்து செய்தியின் கனதி தொடர்பில் மக்கள் உணரக்கூடிய அளவிற்கு அவருடைய அறிவிப்புத் தனித்துவம் பெற்றிருந்தது. நிதர்சனம் நிறுவனத்தில் மாதாந்தம் வெளியாகிய ஒளிவீச்சுக் காணொலிச் சஞ்சிகையில் தொடர்ந்து மாதாந்தம் இடம்பெற்ற "சமகாலப் பார்வை" என்ற நிகழ்ச்சிக்கான குரல் வழங்குபவராக நீண்டகாலமாகச் செயற்பட்டார். நிதர்சனம் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட தமிழீழத் தேசியத் தலைவரின் நேர்காணலுடன் ஒளிபரப்பாகிய "விடுதலைத் தீப்பொறி" என்கிற நிகழ்ச்சியின் குரல் வழங்குநராக செயற்பட்டார். தேசியத் தலைவரின் 50 ஆவது பிறந்தநாளை ஒட்டி நிதர்சனம் நிறுவனம் தயாரித்த "தலைநிமிர்வு 50" என்ற ஆவணப்படம் உட்பட்ட ஏராளமான ஆவண வெளியீடுகளின் பிரதான குரல் தொகுப்பாளராக புகழ்பெற்றிருந்தார்.

இடப்பெயர்வுக்கு முன்னர், நிதர்சனம் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணத்தில் இரண்டு சந்தர்ப்பங்களிலும் பின்னர் முள்ளியவளையில் புலிகளின்குரல் வானொலி செயற்பட்ட 1998 ஆம் ஆண்டு காலப் பகுதியிலும் தேசியத் தலைவரால் மதிப்பளிப்பளிக்கப்பட்டார். புலிகளின்குரல் வானொலியில் ஒலிபரப்பாகிய வரலாற்றுத் தொடரான "காலச்சக்கரம்" என்ற நிகழ்ச்சியை எழுதித் தயாரித்து மறைந்த கலைஞர் சங்கநாதனுடன் இணைந்து குரல் வழங்கியிருந்தார். விவசாயம் சார்ந்த கருப்பொருளை உள்ளடக்கிய "மண்முற்றம்" என்ற நிகழ்ச்சியை எழுதித் தயாரித்து அதில் குரல் வழங்கியுமிருந்தார்.

மக்களின் குரலாக ஒலித்த "ஊர் சுற்றும் ஒலிவாங்கி" என்ற நேர்காணல் நிகழ்ச்சியை புலிகளின்குரல் வானொலியில் தயாரித்திருந்தார். 2003 ஆம் ஆண்டில் ஊடகத்துறையிலிருந்து ஒதுங்கிய அவர் ஆங்கில பகுதிநேர ஆசிரியராகவும் பின்னர் நிரந்தர ஆசிரியராகவும் செயற்பட்டுவந்திருந்தார். அண்மையில் விபத்து ஒன்றில் சிக்கி காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்தநிலையில் மாரடைப்பால் காலமானார். இவ்வுலகை விட்டு அவர் பிரிந்தாலும் தமிழ் ஊடகத்துறைக்கு அவர் ஆற்றிய சேவைகள் என்றும் காலத்தால் அழியாதவையாகும்.

# மழலைகளின் பயணத்தை பாதுகாப்பாக மாற்றுவோம்





■ **மருத்துவர் பா.சயந்தன்**

குழந்தைகள், சிறுவர்கள் சத்திரசிகிச்சை நிபுணர்
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை
மற்றும் சிரேஷ்ட விரிவுரையாளர்
மருத்துவபீடம் யாழ்ப்பாணம்

இன்றைய இயந்திரமயமான வாழ்க்கை முறையில் வீதி விபத்துகளின் மூலம் காயமடைகின்ற மற்றும் உயிரிழப்பை எதிர்கொள்கின்ற சிறார்களின் எண்ணிக்கை அதிகரித்துவருகின்றது. குழந்தை மற்றும் சிறுவர் சத்திரசிகிச்சை நிபுணராகிய நான் அவசர சிகிச்சை அறையில் பல்வேறு வகையான விபரீதமான காயங்களுக்கு உள்ளாகிவருகின்ற சிறுவர்கள் மற்றும் குழந்தைகளுக்குச் சிகிச்சை வழங்கிவருகின்றேன். ஆனால், இந்தக் காயங்களும் உயிரிழப்புகளும் சீட்பெல்ட் மற்றும் தலைக்கவசம் ஆகியவற்றை முறையாக அணிவதன் மூலம் முற்றிலும் தவிர்க்கப்படக்கூடியவை என்பதே உண்மை.

## இருக்கைப்பட்டி இன்றியமையாதது

வாகனத்தின் பின் இருக்கையில் அமர்ந்திருக்கும் வேளையிலும் சீட்பெல்ட் அணிவதாவதானது உயிரிழப்பைத் தடுக்கும். பல பெற்றோர், சிறுதூரப் பயணங்களின்போதும் மற்றும் குழந்தைகள் பின்புற இருக்கையில் அமர்த்தும்போதும் சீட்பெல்ட் அணிவிப்பதில்லை. இது ஆபத்தை ஏற்படுத்தக்கூடியது.

விபத்து நேரும்போது, சீட்பெல்ட் இல்லாத குழந்தைகள் முன்னோக்கி கூடிய வேகத்தில் தூக்கிவீசப்படுவர். இதனால் தலை, முதுகெலும்பு மற்றும் வயிற்றுப் பகுதியில் தீவிர காயங்கள் ஏற்படுகின்றன.

சிறுவர்கள் பின்புற இருக்கையில் அமர்ந்திருக்கும் வேளையிலும் அவர்களுக்குக் கட்டாயமாக சீட்பெல்ட் அணியவேண்டும். சிறுவர்களிற்கு அவர்களின் வயதிற்கு ஏற்றவாறான இருக்கைகள் வழங்கப்படவேண்டும். சிறுவர்களுக்கு சீட்பெல்ட் அணியும்போது அது குழந்தைகளிற்கு இடுப்பு மற்றும் நெஞ்சுப் பகுதியினூடு செல்வதை உறுதிசெய்யவேண்டும். அவை கழுத்துப்பகுதியினூடாகவோ அல்லது வயிற்றுப் பகுதியினூடாகவோ செல்லக்கூடாது.

## தலைக்கவசம் உயிர்க்கவசம்

தலைக்கவசமானது பெரியவர்களுக்கானது மட்டுமல்ல குழந்தைகளுக்கும் மிகவும் அவசியம்

சிறுவர்கள் மோட்டார் வாகனங்களில் பயணிக்கும்போது அவர்களது தலைக்கு ஏற்றவாறு வடிவமைக்கப்பட்ட தலைக்கவசத்தை அணியவேண்டும். தலைக்கவசம் அணியாமல் அல்லது பெரியவர்களுக்கான தலைக்கவசத்தினை அணிந்துசெல்வது முற்றாக தவிர்க்கப்படவேண்டிய ஒன்றாகும். தலையில் ஏற்படும் காயங்களானது மரணத்தை அல்லது உடல் இயங்கமுடியாத நிலையை ஏற்படுத்தலாம்.

## பெற்றோருக்கான அறிவுரைகள்

உங்களது குழந்தைகள் அரசினால் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் அவர்களது தலைக்கு ஏற்றவாறு சரியான அளவில் வடிவமைக்கப்பட்ட தலைக்கவசத்தினை அணிந்திருப்பதை உறுதிப்படுத்தவும். மோட்டார் சைக்கிள்களில் ஒரேதடவையில் ஒன்றுக்கு மேற்பட்ட குழந்தைகளை அழைத்துச்செல்வதைத் தவிர்க்கவும்.

## நிபுணத்துவ அனுபவத்திலிருந்து

பல சிறுவர்கள் தலையில் அடிபட்டு மூளையில் காயங்கள் ஏற்பட்டு மற்றும் மூளையின் உட்புறமாக இரத்தக் கசிவுமூலம் பெரிதளவாக பாதிக்கப்படுவதை சத்திரசிகிச்சை கூடங்களில் பார்த்துள்ளேன். இவை அனைத்துமே வீதி விபத்துகள் ஏற்படுவதைத் தடுப்பதற்காக உருவாக்கப்பட்ட விதிமுறைகள் மற்றும் நெறிகளைக் கடைபிடிக்காமையால் ஏற்பட்ட நிலைமைகளாகவே அமைந்துள்ளன.

## வீதிப்பாதுகாப்பு நடைமுறைகள் வீட்டில் இருந்தே ஆரம்பிக்கப்படவேண்டியவை.

உங்களது குழந்தையானது உங்களின்மூலமே கற்றுக்கொள்கின்றது. நீங்கள் ஒவ்வொருமுறை வெளியே செல்லும்போதும் தலைக்கவசம் மற்றும் சீட்பெல்ட் அணிவது வழக்கமாக இருந்தால், அவர்களும் அதைப் பின்பற்றுவார்கள். அன்றாட வாழ்க்கை நடைமுறைகளைப்போலவே, வீதிப்பாதுகாப்பும் மாற்றமுடியாத ஒன்று என்பதை அவர்களுக்குக் கற்பிக்கவேண்டும். ஒரு கவலைக்குரிய விபத்தானது எமக்குப் படிப்பினை ஒன்றைக் கற்றுத்தரும் நிலைமையில் இருந்து நாம் விடுபடவேண்டும். பெற்றோர் ஆகிய நாம் எமது மழலைச்செல்வங்களைப் பாதுகாப்பதை முதற்கடமையாகக் கொள்ளவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

| தாய் மடியில் | | இறைவனடியில் |
|---|---|---|
| 23 . 02 . 1944 |  | 15 . 07 . 2025 |

## புவனேஸ்வரி நவரட்ணம்

பறாளை வீதி, சுழிபுரத்தை பிறப்பிடமாகவும், நாவலர் வீதி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட புவனேஸ்வரி நவரட்ணம் அவர்கள் நேற்று (15.07.2025) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பர்-வள்ளியாச்சி தம்பதியின் பாசமிகு மகளும் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை-இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் நவரட்ணம் அவர்களின் அன்பு மனைவியும், ராஜிதன் (சிரேஷ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர்.வீதி அபிவிருத்தித் திணைக்களம்-திருகோணமலை), எந்திரி. சுதாகரன் (பிரதிப் பிரதம செயலாளர் பொறியியல் சேவைகள்-வடமாகாணம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சரசசெல்வி, ஸ்ரீசுபானு (பட வரைஞர், வீதி அபிவிருத்தி திணைக்களம்-வடமாகாணம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், செல்வரட்ணம் (பிரான்ஸ்), திரவியம், திலோன்மணி, காலஞ்சென்றவர்களான விஜயரட்ணம், கமலகுமாரி ஆகியோரின் சகோதரியும், டிவினியா, தேஜஷ்வினி, தரணிதன், நிஷானி, நிதுஷிகா, காலஞ்சென்ற நிதிஷன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.07.2025) புதன்கிழமை பிற்பகல் 02.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**
**077 723 5566**






# மாகாணமட்ட கரப்பந்தாட்டப் போட்டி முள்ளியவளை கலைமகள் சம்பியன்

முல்லைத்தீவு, ஜூலை 16

வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான 16 வயது மற்றும் 18 வயதுப் பிரிவு மகளிர் கரப்பந்தாட்டப் போட்டிகளில் முள்ளியவளை கலைமகள் வித்தியாலயம் மூன்றாவது முறையாக முதலிடம் பிடித்து சாதனைபடைத்துள்ளது.

குறித்த போட்டிகள் புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரி மைதானத்தில் கடந்த 9,10ஆம் திகதிகளில் நடைபெற்றன.

37 அணிகளுடன் ஆரம்பமான 16 வயதுப் பிரிவு மாணவிகளுக்கிடையிலான போட்டியின் இறுதிப்போட்டியில் முள்ளியவளை கலைமகள் வித்தியாலய அணியும், வற்றாப்பளை மகாவித்தியாலய அணியும் மோதிக்கொண்டன. இதில் வற்றாப்பளை மகாவித்தியாலய அணியை வீழ்த்தி கலைமகள் வித்தியாலய அணி வெற்றிவாகை சூடியது.

அத்துடன் 18 வயதுப் பிரிவு கரப்பந்தாட்ட இறுதிப் போட்டியிலும் வற்றாப்பளை மகா வித்தியாலய அணியை எதிர்கொண்டு கலைமகள் வித்தியாலய அணி வெற்றி பெற்றுள்ளது.

(ச-25, 19)

**அரைக்கும் ஆலைக்கு வேலையாட்கள் தேவை**

யாழ் நகரில் இயங்கும் அரைக்கும் ஆலைக்கு வேலையாட்கள் தேவை.

அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு : 076 155 9905

# மாவட்டச் செயலகம், கிளிநொச்சி
## பெறுகை அறிவித்தல்.


கிளிநொச்சி மாவட்டச் செயலாளரினால் பின்வரும் விபரங்களைக் கொண்ட குடிசார் வேலைக்கான தேசிய பெறுகை பின்வருமாறு அட்டவனைப்படுத்தப்படுகிறது.

| இல | ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்த பெயர் | ஒப்பந்த காலம் | மதிப்பீட்டுத் தொகை (ரூபா) (வரி நீங்கலாக) | ICTAD தர பதிவு | கேள்வி வங்கி பிணைப்பணம்.'. காலம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | KN/EB/13/ Cir.Bung/25/ 1113-03 | Repair & Improvement Works in Circuit Bungalow at District Secretariat, Kilinochchi, | 90 நாட்கள் | 7.6 மில்லியன் | C8 or above, Building | ரூபா. 114,000/-. 11.11.2025 வரை | 2500.00 |

1. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல விலைக்கோரலாளர்களாலும் விண்ணப்பிப்பதற்கு தகுதியுடையவராவர்.
   I. நிர்மாணப் பயிற்சி கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையினால் (ICTAD/CIDA) தேசிய நிர்மாண ஒப்பந்ததாரரை பதிவு செய்யும் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்ததாரர் பதிவு செய்யப்பட்டிருக்தல் வேண்டும்.
   II. இக்டாட் (ICTAD/CIDA) வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதியளவு ஒப்பந்தங்களை மேற்கொண்ட ஆற்றலைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   III. ஒப்பந்ததாரர் மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றினுக்கு உட்பட்டு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் அட்டவனைப்படுத்தப்படாமலிருத்தல் வேண்டும்
2. ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த கேள்விதாரர்கள் கேள்விகள் தொடர்பான மேலதிக தகவல்களை கிளிநொச்சி மாவட்டச் செயலக நிர்வாகக்கிளையில் பெற்றுக்கொள்ளலாம். (தொ.பே.இல:-0212285663, பக்ஸ் இல:-0212283966)
3. கேள்வி ஆவணங்களை 17.07.2025ஆம் திகதியிலிருந்து 29.07.2025ஆம் திகதி வரை முற்பகல் 9.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை வேலை நாட்களில் கிளிநொச்சி மாவட்டச் செயலக நிர்வாகக் கிளையில் பெற்றுக்கொள்ளலாம்.
4. இப் பெறுகை தொடர்பான தெளிவுபடுத்தல் கூட்டம் (Pre bid meeting) 25.07.2025 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.
5. இரு முத்திரை இடப்பட்ட உறைகளில் (மூலப்பிரதி, பிரதி) தனித்தனியாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட, பெறுகை ஆவணங்களையும் கோருவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணங்களையும் சகல பெறுகை ஆவணங்களையும் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அது தொடர்பாக பந்தி 6 இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு அமைவாக ஒப்படைத்தல் வேண்டும்.
6. முத்திரையிடப்பட்ட பெறுகை ஆவணங்கள் யாவும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "KN/………………………" என ஒப்பந்த இலக்கம் குறிப்பிடப்பட்டு தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, மாவட்டச் செயலகம், கிளிநொச்சி எனும் முகவரிக்கு 30.07.2025 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு முன் கிடைக்கப்பெற கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். பெறுகை ஆவணங்கள் யாவும் உடனடியாக திறக்கப்படும். பெறுகைகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமூகமளிக்க முடியும்.
7. கேள்விகள் தயாரிப்பு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விதாரர்களுக்கு ஏற்படும் ஏதாவது செலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில் தருநர் பொறுப்பாகமாட்டார்.
8. தாமதமாக கிடைக்கும் விலையிடப்பட்ட பெறுகைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**சு.முரளிதரன்**
**திணைக்களப் பெறுகைக் குழுத் தலைவர் / மாவட்டச் செயலாளர்**
**கிளிநொச்சி மாவட்டம்.**

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 24 . 04 . 1971 |  | 20 . 06 . 2025 |

கடந்த (21.06.2025) சனிக்கிழமை அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

## ஐயம்பிள்ளை சிவசக்திவேல்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் (20.07.2025) ஞாயிற்றுக்கிழமை காலை கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக்கிருத்தியக் நிகழ்வுகள் எதிர்வரும் (22.07.2025) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெறும்.. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

சித்தியம்புளியடி கிழக்கு,
தெல்லிப்பளை.

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரலக்சுமி விரதம்!

யாழ்ப்பாணம், ஜூலை 16

வரலக்சுமி விரத சிறப்புப் பூசை வழிபாடுகள் புலோலி பார்வதவர்த்தனி சமேத பசுபதீஸ்வரர் (பருத்தித்துறை சிவன் கோவில்) கோவிலில் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது. வரலக்சுமி விரதத்தை முன்னிட்டு அன்றைய தினம் இடம்பெறும் மாங்கல்யப் பூசை, தீபப் பூசையில் கலந்துகொள்ளும் விரதகாரர்கள் தங்கள் பெயர் மற்றும் நட்சத்திரங்கள் தொடர்பான விபரங்களை ஆலயக் காரியாலயத்தில் பதிவு செய்துகொள்ளுமாறு ஆலயப் பரிபாலன சபையினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (ச-100)

### பணிப்புறக்கணிப்பு...

அலுவலகங்களில் மேலதிக நேரப் பிரச்சினை தொடர்பில் பல்வேறுபட்ட பிரச்சினைகள் காணப்படுகின்றன. இந்தப் பிரச்சினைகள் விரைவில் தீர்க்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியே தபால் தொழிற்சங்க முன்னணியினர் இந்தப் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். (அ-ம-இ)

### ஜூலை 21...

நேற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் - செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான வழக்கு யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் நீதவான் ஏ.ஏ. ஆனந்தராஜா முன்னிலையில் நேற்று விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போதே, செம்மணிப் புதைகுழி தொடர்பான மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகள் எதிர்வரும் 21ஆம் திகதி இடம்பெறும் என்றும், இது தொடர்பான வழக்கு ஒகஸ்ட் மாதம் 6ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-26)

### சிறார்களின்...

அளவிலான காலணி என்றும் அது பெரும்பாலும் சிறார்களுடையதாக இருக்கலாம் என்றும் அறிக்கையிடப்பட்டுள்ளது. செம்மணிப் புதைகுழியில் மீட்கப்பட்ட சான்றுப் பொருள்கள் தொடர்பான 'கூராய்வு அறிக்கை' பேராசிரியர் ராஜ சோமதேவவால் நீதிமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையிலேயே, புதைகுழியில் மீட்கப்பட்ட காலணி, 6ஆம் இலக்க அளவுடையது என்றும், அதில் 39 ரூபா 90 சதம் என்று விலை குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ-ம-26)

### மீட்கப்பட்ட...

மீட்கப்பட்ட சான்றுப்பொருள்கள் பல பெண்களுடையவை என்று பேராசிரியர் ராஜசோமதேவ குறிப்பிட்டுள்ளார். நீலநிறப் பையுடன் அகழ்ந்து எடுக்கப்பட்ட மனித என்புத்தொகுதி, மற்றும் அதனுடன் மீட்கப்பட்ட சான்றுப் பொருள்களின் கூராய்வு அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு பேராசிரியர் ராஜசோமதேவவுக்கு நீதவான் ஏ.ஏ. ஆனந்தராஜா பிரத்தியேகக் கட்டளை பிறப்பித்திருந்தார். 'எஸ்-25' என்று அடையாளப்படுத்தப்பட்ட அந்த மனித என்புத்தொகுதி மற்றும் அதனுடன் இணைந்த சான்றுப் பொருள்களுடன் தொடர்புடைய அறிக்கையிலேயே பேராசிரியர் ராஜ்சோம தேவ இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். தமிழ்பேசும் சமூகத்தைச் சேர்ந்த பெண்களுடையவை என்று கருதக்கூடிய இரண்டு காற்சங்கிலிகள், உடைகள், உடைகளுக்கு மேலதிகமாக சில துணிகள், 8 வளையல்கள் (அவற்றில் 4 பிளாஸ்ரிக் வளையல்கள், 4 உலோகக் கூறுகளுடனான வளையல்கள்) என்பனவும் இதன்போது மீட்கப்பட்டன. இதே வேளை, உள்ளாடைகள் எவையும் அவதானிக்கப்படவில்லை என்று பேராசிரியர் ராஜசோமதேவ மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-ம-26)

### தடயப்...

புகள் காணப்படுகின்றன என்று, நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதன்படி, நீலநிறப் பையுடன் மீட்கப்பட்ட 'எஸ்-25' என அடையாளமிடப்பட்ட மனித என்புத் தொகுதியுடன் மீட்கப்பட்ட சான்றுப்பொருள்களுக்கும், 'எஸ்-48', 'எஸ்-56' என அடையாளமிடப்பட்ட மனித என்புத் தொகுதிகளுடன் மீட்கப்பட்ட சான்றுப் பொருள்களுக்கும் இடையில் நெருக்கமான தொடர்புகள் காணப்படுகின்றன. எனவே, 'எஸ்-48', 'எஸ்-56' என அடையாளமிடப்பட்ட மனித என்புத் தொகுதிகள் தொடர்பிலும் விரிவான கூராய்வுகளை மேற்கொள்ளவேண்டும். மீட்கப்பட்ட சான்றுப்பொருள்கள் சீருடைகளை ஒத்ததாகக் காணப்படுகின்றன என்று மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-ம-26)

### பெண்...

நீலநிறப் பையுடன் அகழ்ந்து எடுக்கப்பட்ட மனித என்புத்தொகுதி தொடர்பான மருத்துவ கூராய்வு ஆய்வறிக்கையை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு சட்ட மருத்துவ அதிகாரி செல்லையா பிரணவனுக்கு நீதவான் ஏ.ஏ. ஆனந்தராஜாவால் உத்தரவு வழங்கப்பட்டிருந்தது. அந்த அறிக்கை நீதிமன்றத்தில் நேற்றுச் சமர்ப்பிக்கப்பட்டது. இதன்போதே, 'எஸ் 25' என அடையாளப்படுத்தப்பட்ட அந்த என்புத் தொகுதி பெண் பிள்ளையுடையது. அந்த என்புத் தொகுதி 92 சென்ரி மீற்றர் நீளமுடையது என்பதுடன், அந்தப் பிள்ளை 4 அல்லது 5 வயதுடையதாக இருந்திருக்க வாய்ப்புகள் உள்ளன என்று குறிப்பிடப்பட்டுள்ளது. என்பு பருவவியல் ஆய்வுகளின் அடிப்படையில் இந்த அறிக்கை கணிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

### கட்டப்பட்ட...

இருந்து மீட்கப்பட்ட பொதிகளுக்குள் மனிதச் சிதிலங்கள் காணப்படுகின்றன என்று நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டுள்ளது. மனிதப் புதைகுழி தொடர்பில், பேராசிரியர் ராஜ்சோமதேவாவின் அறிக்கை நேற்று நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்டது. அந்த அறிக்கையிலேயே, ட்ரோன் மூலம் அடையாளம் காணப்பட்ட பகுதியில் ஆய்வு செய்யப்பட்ட பகுதியில் தோண்டப்பட்ட குழிக்குள் இருந்து இரண்டு பொதிகள் அவதானிக்கப்பட்டன. அவற்றில் துணியால் கட்டப்பட்டதாக ஒரு பொதி காணப்படுகின்றது. மற்றையது 'றப்சீற்றால்' கட்டப்பட்ட பொதியாகக் காணப்படுகின்றது. இரண்டுக்குள்ளும் என்புச் சிதிலங்கள் உள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவை பெரும்பாலும் சிறுவர்களுடையதாக இருக்கலாம் என்பதுடன், துல்லியத் தகவல்களை அறிவதற்காக மேலதிக கூராய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-ம-26)

### மாரடைப்புக்...

வவுனியா, கூமாங்குளம் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை வீதியில் சடலமாக மீட்கப்பட்டவர், மாரடைப்புக் காரணமாகவே உயிரிழந்தார் என்று சட்டமருத்துவ அதிகாரியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வவுனியா - கூமாங்குளம் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு மோட்டார் சைக்கிளில் பயணித்த இராமசாமி அந்தோனிப்பிள்ளை (வயது - 58) என்ற நபர் வீதியில் வீழ்ந்து மரணமடைந்திருந்தார். அந்தப் பகுதியால் பயணித்த போக்குவரத்துப் பொலிஸாரே இந்த இறப்புக்குக் காரணம் என்று தெரிவித்து, மக்கள் பெரும் குழப்பத்தில் ஈடுபட்டதுடன், பொலிஸார் மீது தாக்குதல்களையும் நடத்தியிருந்தனர்.

பொதுமக்களின் குற்றச்சாட்டுகளைப் பொலிஸார் மறுத்ததுடன், 'நபரொருவர் வீதியில் வீழ்ந்து கிடக்கின்றார்' என்று கிடைத்த தகவலுக்கு அமையவே அங்கு சென்றதாகக் கூறியிருந்தனர். உயிரிழந்தவரின் சடலம் மீதான உடற்கூற்றுப் பரிசோதனை, வவுனியா மருத்துவமனையில் சட்ட மருத்துவ அதிகாரி எம்.டி.ஆர். நாயக்கரத்ன முன்னிலையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதன்போதே, மாரடைப்புக் காரணமாகவே, இந்த இறப்புச் சம்பவித்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், 'மரணித்தவரின் உடலில் புதிய காயங்கள் எதுவும் இல்லை. வலது காலில் பழைய வடுக்கள் காணப்படுகின்றன. இதயத்தின் முன் புறப்பகுதியில் கடுமையான இரத்த உறைவு உருவாக்கம் காணப்படுகின்றது' என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதயத்தின் தசைப்பகுதி மற்றும் குருதிமாதிரி கொழும்புக்கு இரசாயன பகுப்பாய்வுக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-110)

### விசாரணைகளில்...

ணைகளில் தெரியவந்துள்ளன என்று அமைச்சரவையின் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று மாலை நடத்தப்பட்டது. இதன்போது, உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகள் எந்த மட்டத்தில் உள்ளன என்று அமைச்சர் நளிந்தவிடம் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினார்கள்.

இந்தக் கேள்விக்கு அமைச்சர் நளிந்த தெரிவித்ததாவது:-

உயிர்த்தஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் அசாத் மௌலானா உட்பட தேவையான நபர்களை நாட்டுக்குக் கொண்டுவருவதற்கு இராஜதந்திர நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்த விடயத்தில் சந்தேகம் கொள்ளவேண்டிய அவசியமில்லை.

இதுவரையில் வெளிவராத பல தகவல்கள் விசாரணைகளில் வெளிவந்தவண்ணம் உள்ளன. அவற்றின் ஒரு பகுதியையே பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் நாடாளுமன்றத்தில் பகிரங்கப்படுத்தினார். விசாரணைகளின் பிரகாரம் எதிர்காலத்தில் சிலர் கைதுசெய்யப்படலாம். விசாரணைகள் இன்னும் நிறைவு பெறவில்லை. அது விரைவுபடுத்தப்பட்டு, நீதிமன்றம் ஊடாக உரிய நடவடிக்கை இடம்பெறும்' - என்றார். (அ-ம-44)

### உயர்மட்ட...

தெரிவிக்கப்பட்டுள்ளது. வடமாகாண ஆளுநரின் செயலராகக் கடமையாற்றிய மு.நந்தகோபாலன், மகளிர் விவகார, கூட்டுறவு, மறுவாழ்வு அமைச்சின் செயலாளராகவும், பருத்தித்துறைப் பிரதேச செயலராகக் கடமையாற்றிய சி.சத்தியசீலன், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளராகவும், கோப்பாய் பிரதேச செயலராகக் கடமையாற்றிய சிவஸ்ரீ விவசாய அமைச்சின் செயலாளராகவும், விவசாய அமைச்சின் செயலாளராகக் கடமையாற்றிய ஆழ்வார்ப் பிள்ளைஸ்ரீ, பொதுச்சேவைகள் ஆணைக் குழுவின் செயலாளராகவும், காணி ஆணையாளராகக் கடமையாற்றிய அ.சோதிநாதன், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். (அ-ம-26)

### காணிகளை...

செயலகத்துக்கு முன்பாக நேற்றுப் போராட்டம் இடம்பெற்றது.

மன்னார் சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தின் ஒருங்கிணைப்பில், வலிகாமம் வடக்கைச் சேர்ந்த பல்வேறு சிவில், சமூக அமைப்புகள் இணைந்து இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தன.

அதியுயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகள் உடனடியாக விடுவிக்கப்படவேண்டும் என்று போராட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் வலியுறுத்தினார்கள். நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

### மனித...

செம்மணிப் புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகள் ஜூலை மாதம் 10ஆம் திகதியுடன் முடிவுக்கு வந்தன.

இதன்போது, இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகள் தொடர்பில் நீதிமன்றத்தில் அறிக்கையிடுமாறு, துறைசார் நிபுணரும், பேராசிரியருமான ராஜ்சோமதேவாவுக்கு நீதவான் ஏ.ஏ. ஆனந்தராஜா உத்தரவிட்டிருந்தார்.

இந்த உத்தரவுக்கு அமைய பேராசிரியர் ராஜ்சோமதேவ நீதிமன்றத்தில் தனது அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளார். அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

செம்மணி மனிதப் புதைகுழியில் இதுவரை 65 என்புத்தொகுதிகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. இந்தப் புதைகுழியில் பாரம்பரிய அல்லது மரபு ரீதியான வகையில் சடலங்கள் அடக்கம் செய்யப்படவில்லை என்பது உறுதியாகத் தெரியவருகின்றது. இதன்படி, குற்றச்சம்பவங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றிருக்கலாம் என்பது இந்த அடக்க முறைமைகளில் இருந்து தெரியவருகின்றது. மேலதிக தகவல்களுக்காக அகழ்வுப் பணிகள் தொடரப்படவேண்டும் - என்றுள்ளது. (அ-ம-26)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# போலி நாணயத்தாள்கள் அச்சடித்த பெண் கைது

கொழும்பு, ஜூலை 16

மொரட்டுவப் பகுதியில் போலி நாணயத்தாள்களுடன் பெண் சந்தேகநபர் ஒருவர் மொரட்டுவப் பொலிஸாரினால் நேற்று செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரை விசாரணைக் குட்படுத்தியபோது போலி நாணயத்தாள்களை அச்சிடப் பயன்படுத்தப் பட்ட அச்சு இயந்திரம் மற்றும் 5ஆயிரம், 100 ரூபா உள்ளிட்ட போலி நாணயத் தாள்கள் என்பன அவரின் வீட்டிலிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன. (ச-இ)



யாழ்ப்பாணம் - சண்டிலிப்பாய் கல்வளை விநாயகர் ஆலய வருடாந்த தீர்த்தோற்சவம் கடந்த வியாழக்கிழமை பக்தர்களின் பாற்குடப் பவனியுடன் சிறப்புற இடம்பெற்றது. (ச-63)

# பிள்ளையான் தயவிலேயே கிழக்கில் தே.ம.சக்தி ஆட்சி

## எதிர்க்கட்சி சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை 16

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் பிள்ளையான் முன்கூட்டியே அறிந்திருந்தார் எனக் கூறும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், கிழக்கில் ஆட்சி யமைப்பதற்கு அவரின் உதவியையும் பெற்றுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா குற்றஞ்சாட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் பிள்ளையான் அனைத்துத் தகவல்களையும் அறிந்திருந்தார் எனப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தின்போது தெரிவித்தார்.

பிள்ளையான் அவ்வாறு தகவல்களை அறிந்துவைத்திருந்தால் அது பாரதூரமான விடயம். தகவல்கள் தெரிந்தும் அவற்றை வெளிப்படுத்தவில்லையெனில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கமுடியும்.

ஆனால் கிழக்கில் ஆட்சியமைப்பதற்கு பிள்ளையானுடனும் என்.பி.பி. யினர் பேச்சு நடத்தினார்கள். சில சபைகளில் ஆதரவும் பெற்றுள்ளனர். கள்வர்கள், மோசடியாளர்கள் எனக் கூறிய தரப்புகளுடனும் இவர்கள் ஒப்பந்தம் கைச்சாத்திட்டுள்ளனர். இரகசிய வாக்கெடுப்பு நடத்தினர்.

அதிகாரத்துக்காக எதையும் செய்யத் தயார் என்ற விடயத்தையே இதன்மூலம் அவர்கள் குறிப்பிடுகின்றனர்-என்றார். (ச-44)

**தென்னந் தோட்டக்காணி விற்பனைக்கு**

பச்சிலைப்பள்ளி பளைப் பிரதேசத்தில் 40 ஏக்கர் வளமான தென்னைக்கு உகந்த காணி விற்பனைக்கு உண்டு.10 ஏக்கராகவும் பெற்றுக் கொள்ளலாம். 1 ஏக்கர் 15 இலட்சம்.

தொடர்பு:-
Whatsapp:- 0044 740 537 3526

(CS/58593) J-1

# அமெரிக்காவிடம் இருந்து வரிக்குறைப்புப் பெறுவோம்

## அரசாங்கம் நம்பிக்கை

கொழும்பு, ஜூலை 16

அமெரிக்காவிடம் இருந்து வரிக்குறைப்பை பெற்றுக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கை உள்ளது. அதற்குரிய பேச்சுவார்த்தைகளும் இடம்பெற்று வருகின்றன என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அமெரிக்க வர்த்தகத் திணைக்களத்துடன், இலங்கைப் பிரதிநிதிகள் குழு இரு தடவைகள் வொஷிங்டனுக்குச் சென்று நேரடிப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகின்றது. நிகழ்நிலை ஊடாகவும் பலசுற்றுப் பேச்சுகள் இடம்பெற்று வருகின்றன. இதற்கமைய சாதகமான முடிவுகள் கிடைக்கப் பெறும் என நம்புகின்றோம்.

ஆரம்பத்தில் எமக்கு 44 வீதமான வரிகள் விதிக்கப்பட்டன. பின்னர் அந்த வரிகள் 30 வீதமாகக் குறைக்கப்பட்டன. இதை நல்ல அறிகுறியாகக் கருதி தொடர்ந்தும் முன்னேறிச் செல்வதற்கு எதிர்பார்த்துள்ளோம். நாட்டுக்கு முழுமையான நன்மைகளை ஏற்படுத்தும் வகையில், பேச்சுவார்த்தைகள் இடம்பெறும் - என்றார். (அ-ம-44)

**வேலையாட்கள் தேவை**

சாவகச்சேரியில் கட்டட வேலைக்கு மேசன், கூலியாட்கள் தேவை. தங்குமிட வசதிகள் வழங்கப்படும்.

Tecora Construction (Pvt) Ltd
Everythinghere.lk
076 831 0115

**உடனடி வேலை வாய்ப்புகள்**

யாழ்நகரில் உள்ள புடவை விற்பனை நிலையத்திற்கு

**City Tex - Nallur**

அனுபவம் உள்ள, பழகவிரும்பும் ஆண், பெண் விற்பனையாளர் உடன் தேவை.

அருகில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

சம்பளம் - 35000 + Bonus, வயது - 18 - 25 வரை.

வேலை நேரம் காலை 9.00 - இரவு 8.30 வரை.

மதிய உணவு, தேநீர் வழங்கப்படும்.

021 221 6185, 077 293 5537

(CS/58884) J-1

# பருத்தித்துறை சிவன் பெருந்திருவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 16

புலோலி பர்வதவர்த்தனி சமேத பசுபதீஸ்வரர் (பருத்தித்துறை சிவன் கோவில்) தேவஸ்தான வருடாந்த பெருவிழா எதிர்வரும் 19ஆம் திகதி சனிக்கிழமை பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

26ஆம் திகதி சனிக்கிழமை மாலை 7 மணிக்கு சப்பறத் திருவிழாவும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு இரதோற்சவமும், 28 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்குத் தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. (ச-25,100)

# இராணுவத்தால் மரநடுகை நிகழ்வு

மன்னார், ஜூலை 16



இராணுவத்தின் 542 ஆவது காலாட்படைப் பிரிவு ஏற்பாடுசெய்த தேசிய மரநடுகை நிகழ்வு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மன்னார் மடுத் திருத்தல வளாகத்தில் இடம் பெற்றது.

நிகழ்வில் மன்னார் மறைமாவட்ட ஆயர் அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகை, மன்னார் மாவட்டச் செயலாளர் கே. கனகேஸ்வரன், 54ஆவது காலாட்படைப் பிரிவின் தளபதி மேஜர் ஜெனரல் ஏ.எம்.சி. அபேகோன், 542ஆவது காலாட்படைப் பிரிகேடியர் தளபதி பிரிகேடியர் சந்தன அசுர சிங்க, பிராந்திய வன அதிகாரி வீரகோன் மற்றும் சிவில் விவகார அதிகாரி 542ஆவது காலாட்படைப்பிரிவின் ஒருங்கிணைப்பில் இராணுவத்தினர் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-41-56)

**சைவ வித்தியா விருத்திச் சங்கம்**
**உடனடி வேலை வாய்ப்பு**

**முகாமையாளர் - பெண்**

எமது சங்க நிர்வாகத்தின் கீழ் உள்ள பெண்கள் இல்லத்திற்கான இல்ல முகாமையாளர் பதவிக்காக தகுதியுள்ள அனுபவம் வாய்ந்த விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**நிபந்தனைகள் / அனுகூலங்கள்**

- வயதெல்லை 30 - 55
- துறைசார்ந்த முன்னனுபவத்திற்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
- சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
- கணினி பயன்பாட்டு திறன் கொண்டிருத்தல்.
- தங்குமிடம். உணவு வழங்கப்படும்.
- கல்வித்தகைமை : க.பொ.த உயர்தரம் சித்தி அல்லது அதற்கு மேற்பட்டது.

உங்கள் சுய விபரக்கோவையினை 21.07.2025 இற்கு முன்பதாகத் தபாலிலோ அல்லது நேரிலோ சமர்ப்பிக்கவும்.

த.தவரூபன்
செயலாளர்
சைவ வித்தியா விருத்திச்சங்கம்
கலாசாலை வீதி. திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 6525, 076 300 4877

(CR/45519) J-1

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.07.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.